m 211, N28K N
N34.7.46.
199196

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு நவம்பர் மீ 22 உ [No. 46

OFFICE OF THE ... OF BOOKS
21 MAR 1935
MADRAS

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	721	5.	இரத்நாவளி (அங்கம் 2. களம் 5.) வடமொழி நாடக மொழிபெயர்ப்பு	731
2.	கம்பராமாயணம் (அரசியற் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L.	724	6.	சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்) வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L	734
3.	தமிழ்ப்பாடம் —(இலக்கணம்)	727	7.	தனிப்பாடல்கள் நவாலி க. சோமசுந்தரப் புலவர்	735
4.	நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.	728	8.	வர்த்தமானம்	736

கலாநிலயம்

யார் நாண? 2.

ஆம். பிறர் நமக்குச் செய்கின்ற தீமைகளைப் பொறுத்துக்கொளல் நம்முடைய கடமைகளில் எல்லாம் மிகச் சிறியது. நாம் செய்த தீவினைகளே நம் பகைவர்களாக வந்து நம்மை நலிகின்றன என்னும் அவ்வாய்மையை நம்பி அடங்குதல் சான்றாண்மையெய்துதற்கு ஏறுவோர் ஏறவேண்டிய படிகளில் முதற்படி யாகலாம். தாம்மற்றவர்க்கு நன்மைமுயன்று செய்யாமையே தம்மீது மறித்து இத்தீமையாய் விளைந்தது எனக்கண்டு தம்மையே நொந்துகொள்ளல் இரண்டாவது படியாய் அமைந்திருக்கின்றதென்று கருதுதல் கூடும். இவ்விரண்டு வகையிலும் நோக்குங்கால், தம்மை இன்னா செய்தவரை ஒறுத்தவர், அதனால் ஒருநாளை யின்பமும் காணமாட்டாமல் கண்பிசைந்திடுவார். ஏனெனில் தாம் தமது கடமையைச் செய்யாது விட்ட குற்றத்தின் நினைவினால் விளைகின்ற வேகமே இப்படி ஒறுக்கும்படி தம்மைத் தூண்டுகின்றதென்னும் தன்மை தோன்றத் தோன்ற, தமக்குத் தீங்கு செய்தாரை ஒறுக்குந்தோறும், தம்முடைய தகவிலாத் தாழ்மையே தலைக்கொள்ளு மென்பதில் ஐயமில்லை.

ஒறுத்தார்க்கு இவ்வண்ணம் ஒருநாளையின்பமும் அரிதாக, பொறுத்தவர் அப்பொறுமையால் புரிந்தது என்னவெனச் சிறிது நோக்குவோம். "உன்னைப்பற்றிய பொறுப்பொன்றும் நான் மேற்கொள்ளாமல் இருந்த [illegible] னால் நலியப்பெற்றேன்; ஆதலின், உன்னை வெகுள்வதும் ஒறுப்பதும் அநீதியின்மீது அநீதியே புரிந்ததாகும்; அதுவேனுஞ் செய்யாமல் என்னைக் காத்துக்கொள்கின்றேன்'' என்னத் தன்னுடைய குற்றத்தை மேன்மேலும் பெருக்காமையே அப்பொறுமை யென்னப் போற்றத்தகுந்ததாய் நிற்கின்றது. இந்நிலையினை, சான்றோராதற்கு ஏறவேண்டிய மூன்றாவது படி யென்னலாம். இதனால் இவர்களுக்கு வாய்க்கின்ற புகழெல்லாம், தேடாமற்றானே வந்தடைகின்ற இலாபமாம். எனின், "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'' எனத் திருவள்ளுவர் எடுத்துக் காட்டியிருக்கின்ற அந்நீதி நமக்கு இருதிறத்தில் உபயோகப்படக்கூடியதாய் நிற்கின்றது. இன்றைக்கு நாம் இவனுக்கு ஓர் தீங்கு செய்தால் அதுவே நாளை நமக்குத் தீங்காய் வந்துசேருமே என்னும் அச்சத்தினால் மற்றவர்க்கு இன்னா செய்யாமை யாகின்ற ஆசாரம் ஒருவாறு கைவந்ததாகலாம். எதிரது நோக்குங்கால் இவ்வாசாரத்திற்கு அதாரமாகின்ற அவ்வாசகம் இறந்தது தழுவுமாயின், முன்னிங்குக் காட்டியிருக்கின்றபடி, பொறையுடைமைக்கு உரியவோர் காரணத்தை அறிவுறுத்தியதுமாகும்.

ஆதலின், தான் பிறருக்குச் செய்த தீமையே பின் பிறர் தனக்குச் செய்த தீமையாய் மாறி வந்ததென்னும் நம்பிக்கையும், பிறர் தீங்கு செய்வதால் அவர்களே கேடுறுவார்களே என்று மனம் இரங்கி அவர்

அத்தீமைகள் புரியாமலிருக்கும்படி அவர்பொருட்டு யாதொன்றும் முயலாத பொறுப்பற்றவனாய்த் தான் கிடந்ததாற்றான் தனக்கு இத்தீங்குஇப்பொழுதுநேர்ந்ததென்னும் நினைவும், அந்நம்பிக்கையும் இந்நினைவும் ஆதாரமாக, தனக்கு இன்னா செய்தாரை எதிர் ஒறுக்காமல் அமைகின்ற பொறுமையும், முறையே மேன்மேல் ஒருவனை உயர்த்துகின்ற முனைவுகளாய் நிற்கின்றன. இதன் மேலும் ஒன்று கூறுகின்றார் திருவள்ளுவர். அதனையும் சிறிது ஆழ்ந்து சோதித்தல் வேண்டும். அப் பொய்யாமொழிப்புலவர் புகலுந்திறத்தில் அவ்வாசகத்தின் மேன்மை அளவிறந்ததாக இருக்கின்றதேனும், அம்மேன்மையை எய்தும்பொருட்டே நம்மனோர் சிறிது பிற்படவேண்டியது அவசியமாகின்றது—இது,பொருதகர்தாக்கற்குப் பேருந்தகைத்து.

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று

[உனக்குத் தீங்குசெய்தவரை நீ ஒறுக்கக்கூடிய காலத்தும் அதனைப் பொறுத்துக்கொள்க.அதனை உட்கொள்ளாமல் அப்பொழுதே மறந்து விடுதல் அப்பொறையைவிட நல்லதாம்]

என்று திருவள்ளுவர் சாற்றுகின்றார். மேற்கூறிய முவ்வகை நோக்கங்களால் பொறுத்தலின் மேன்மையையும் தூய்மையையும் நன்மையையும் எக்காலத்தினரேனும் எவ்வுலகத்தினோரும் சற்றேனும் மறுத்ததில்லை. அதைப் பொறுத்ததுமன்றி மறத்தல் அதனினும் மேம்பாடுடையதென்பதும் அன்னதே. நமது நண்பர் உறவினர்களில் ஒருவர் நமக்கு ஒரு தீங்கு செய்திருக்க அதனை மறந்து நாம் பண்டேபோல் அவர்களுடன் உறவாடியதைப் பின்னர் நாமே நினைத்துப்பார்க்க நேருமாயின் அவ்வொரு வேளை நம்முடைய வாழ்க்கையின் திப்பியமான வேளைகளில் ஒன்றாகத் தோன்றி உவகை பெருகிய உள்ளத்தராய் நாம் நம்முடைய மதிப்பிலேயே பலபடி உயர்ந்தவர்களாய்க் காணப்பெறுவோம். "எனக்கொரு தீமை அவன் செய்திருந்தும், நான் (அவன் நாணவேண்டுமென்பதின்றி) அதனை மறந்து நன்னயஞ் செய்தேனே. கடவுளே, என் இதயத்தில் இத்துணைத் தூய்மை தோன்றும்படி நீ கருணை வைத்தாய். உன்னைப் போதியவளவு போற்றுதற்கு ஆற்றாமல் திகைக்கின்றேன்" என எண்ணி யெண்ணி உருகுகின்ற செவ்வி, இறப்பினை மறத்தலால் வாய்க்கப்பெறும். அச்செவ்வியும் அதனின்று பிறக்கின்ற இத்திப்பிய அனுபவமும்தம் வாழ்நாட்களில் ஒருமுறையேனும் வாய்க்கப்பெறுவாரானால் அவர் வீணிற்கிங்குப் பிறந்து வளர்ந்தவராகமாட்டார். இனி, எல்லாச் சால்பும் அவரது,எல்லாத் தூய்மையும் அவரது, எல்லா மேன்மையும் அவரது;அதுதான் மானுட உரிமை."மனிதன் எனத்தக்கான் இதோ ஒருவன் உளன்" என்று குறித்துக் காட்டுதற் குரியாரும் அன்னவர்களே.

மறத்தலின் மேன்மையை இத்துணை உயர்த்திப் பேசிய இச்சொற்கள் அத்தனையும் மெய். பொறுத்தலிற்குஇம்மறத்தல் அடுத்தபடியேயாயினும் இவையிரண்டும் பூமியும் வானமும் போல் உயரத்தால் மிக அகன்றிருக்கின்றன. ஆதலின் இதனின்று அதனிற்றாவுதற்கு நம்மனோர் சில உபாயங்களைக் கைக்கொள்ளல் நலமென நினைக்கின்றோம். அவ்வுபாயமும் சிந்தனையின் திறத்ததேயன்றி வேறன்று.

நாம் பிறருக்குச்செய்த தீமைகளும், நாம் பிறருக்குச் செய்திருக்கவேண்டிய நன்மைகளைச் செய்யாதுவிட்டகுறைகளும், ஆகிய இவைகளே பிறர்நமக்குச் செய்யும் தீங்குகள் என்னும் உருவத்தில்வந்து நலிந்தனஎன்னும்நினைவு பொறுமையுடைமைக்குஉபகாரமாவதுபோல், அந்தத் தீங்குகளை நாம் மறவாதிருத்தல் நம்மை நல்லொழுக்கத்தில் நிலைநிறுத்துவதற்கு ஓரளவு உதவியாகலாம். இன்னா செய்யாமை, நல்லன செய்கை, பொறையுடைமை அனைய நல்லொழுக்கங்களே இங்குக் கருதப்படுகின்றன. ஒருவன் நமக்குச் செய்த தீமையை மறந்தோமெனின், அவன் செய்த காரியத்தை மறக்கின்றநன்மை புரியப்பெறுகின்றதெனினும், முன்னிங்கு எடுத்துக்காட்டியிருக்கின்றபடி அதற்குக் காரணமாயிருந்த நம்குற்றங்களும்மறக்கப்பெறலாகின்றன. அவை மறக்குமாயின் மீண்டும்நாம் அக்குற்றங்களைப் புரிவதும், மீண்டும் மீண்டும் அதற்குரிய தண்டனையைப் பெறுவதும், மீண்டும் மீண்டும் அத்தண்டனையைப் பொறுப்பதும், மீண்டும்மீண்டும் பண்டேபோல் அனைத்தையும் மறப்பதுமே கடனாகிமுடியும். இதற்கெதிர், மறத்தல் இன்றி, இன்னான் நமக்கு இன்ன தீங்குசெய்தான் என்பதை நினைவில் நிறுத்திக்கொண்டிருப்போமாயின் அதனால் விளையவல்லநன்மைகள் பலவுள. செற்றமாக இந்நினைவைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்று நாம் இங்குச் சொல்லவரவில்லை யென்பதுவெளிப்படை. அவனைப் பொறுத்தபின், அவன் செய்த தீங்கினை மாத்திரம் மறவாமையே இங்கு வேண்டப்படுகிறது. இது எற்றுக்கு?

பிறர் நமக்குச்செய்ததீங்கும், அதனால் நாம்பட்ட வருத்தமும் நினைவில் இருக்குமானால், பிறர்க்கின்னா செய்யாமைக்கு அது உயரியதோர் ஊன்றுகோலாய் அமைதல் கூடும். அவன், தனக்குச் செய்த தீங்கினால் தான் வருந்தியதுபோன்றே, தன்னால் தீங்குசெய்யப்படுவாரும் வருந்துவார்கள் அல்லரோ என்னும்மனப்பான்மையினால் பலர் இன்னாசெய் நினைவை மாற்றிக் கொள்பவர் ஆகலாம்.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை

என்றனர் திருவள்ளுவர். அறிவினால் இதனை ஊகித்துக்கொள்வதிலும், தாம் பட்டு அனுபவித்ததால் தேர்ந்துகொள்ளக் கூடியவர்களே அதிகம். ஆதலின்,

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்

என்றபடி, அறிந்தபடி நடப்பதனிலும் உணர்ந்தபடி நடக்க நேர்வதே சற்றே எளிதில் கைவரக்கூடியதாக இருக்கும். மனத்தினால் ஊகித்து இவ்வுணர்வு வாய்ப்பதனிலும் தானே நேராகப் பட்டதன் அனுபவத்

தால் அதனைப் பெறுவது நிலைத்திருக்கும் நிச்சயமும் உடையது. ஆதலாற்றான் திருவள்ளுவர்,

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்

என மீண்டும் வற்புறுத்துவாராகின்றார்.மனோபாவம் குறைந்திருப்பவர்களுக்கு இத்துணை வற்புறுத்தலும் அவசியமே.

இவைகளைக் கருதுங்கால், பிறர் நமக்குச் செய்த தீங்கை மறவாமை, நாம் மற்றவர்க்குத் தீங்குசெய்ய நினையாமைக்கு ஏதுவாகக்கூடிய தன்மை விளங்குகின்றது. "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்னும் அச்சத்தால் பிறர்க்கின்னாசெய்யமலிருத்தற்கு அம்மறதியின்மை ஆதாரமாவதுடன், தாம் வருந்தியதுபோற்றானே பிறரும் வருந்துவார் என்ற அன்பினால் இன்னாசெய்யாமைக்கும் அம்மறதியின்மையே ஆதாரமாவதும் இயற்கை.

செய்ததீங்கினைப் பொறுத்தும் மறத்தலின்மையாலின்னுமோர்நன்மையு முளது; அது முன்னையதின் பெரியதுமாகும். பிறர் நமக்குச்செய்த தீமையை மறவாமல் இருந்தாற்றான் அதனை நாம் பொறுத்தோம் என்ற நினைவும் உடன் இருத்தல் கூடும். இந்நினைவு எற்றுக்கு இருத்தல்வேண்டும்என்றுசிலர் ஐயுறலாம். "நன்றிமறப்பதுநன்றன்று நன்றல்லது அன்றேமறப்பதுநன்று" என்னும் இவ்வுறுதிவாக்கியம், பிறர்செய்தநன்மைதீமைகளுக்குப் பொருந்துவதுபோன்றே தான் செய்த நன்மை தீமைகளுக்கும் பொருந்தும். மற்றவன் நமக்குச்செய்த பிழையை நாம் பொறுத்தது நன்மையாம்; அந்நன்மை நாம்செய்தோம் என்பதை மறத்தல்நன்றுஅன்று.நாம் மற்றவர்களுக்குத் தீமைசெய்தோமாயின் அது நன்றல்லது;அதனையோ அன்றே மறந்துவிடல் நன்று. பின்னதன் காரணத்தை முதலிற் கூறிவிடலாம். மெய்யுணர்வு விளைவிக்கும்நற்கல்வியால் பண்படாதமனமுடையோர்,ஓரோவழிதமக்குத் தீங்குசெய்தவர்களைப் பொறுத்தாலும் பொறுப்பரே யொழிய, தம்மால் தீங்கு செய்யப்பட்டாரை ஒருபோதும் பொறுக்காமல் அவர்களுக்கு மேன்மேலும் வருத்தங்கள் செய்துகொண்டேஇருக்கும் இயல்பினராகின்றார் என்றுஆங்கிலநூலாசிரியர் ஒருவர் நுண்ணிதின் ஆராய்ந்து (ஜார்ஜ்எலியட் என நினைக்கின்றோம்) கூறியிருப்பது உலக நடமாட்டத்தில் மிகவும் கவனித்துப் பார்த்துக் கண்ணுறவேண்டியஉண்மைகளில் ஒன்று. ஆதலின் நாம்மற்றவர்க்கு நன்று அல்லதைச் செய்துவிட நேருமாயின் அதனை அன்றே மறந்துவிடல் நலமாம்; அப்பொழுதுதான் மேன்மேலும் அவர்களுக்குத் தீதுசெய்யாம லிருக்கக் கூடியதாகும். எனின், மற்றவர்களுக்குச் செய்த நன்மையை மறத்தலாகாதென்பது அதன் மறுநிலையுண்மையாய் நின்று, தன்னால் நன்மை செய்யப்பட்டவர்களுக்கு மேன்மேலும் நன்மையே செய்யும்படி தூண்டவல்ல தூய்மையுடையதாகலாம்.பிறர்செய்த தீமையை நாம் பொறுத்தோம் என்னும் நினைவினால் வாய்க்கின்ற நலம் இன்னது.

இனி, பிறர் நமக்குத் தீமை செய்தனர் என்றதை மறவாதிருத்தலின் நன்மை யாவதாதல் கூடும் என்பதையும் முன்னிங்கு உரைத்தவைகளினின்று ஊகித்துக்கொள்ளுதல் இயலும். பிறர் செய்த தீமையைப் பொறுத்துக்கொண்டதோடு நம்முடைய கடமையுந் தீர்ந்துவிட்டதாயின், அவ்வளவிலேயே அவர்செய்த தீமையையும் அதனைநாம் பொறுத்துக்கொண்டதையும் ஒருங்கே மறந்துவிடல் நன்றாகலாம். மற்று,ஆழ்ந்துநோக்குங்கால் நம்முடையகடமை அதனுடன் தீர்ந்துவிட வில்லையே. பிறர் நமக்குத் தீங்கு செய்யும்படி நேர்ந்ததற்கு மூலகாரணமா யிருந்தவைகளையும் நம்மிடத்தினின்று ஒழித்துவிட முயலவேண்டியவர்களா யிருக்கின்றோம். அவைதாம்,நாம் மற்றவர்க்குத் தீங்கு செய்யும் குணமும், மற்றவர் எவர்க்கும் தீமை செய்யலாற்றா நல்லவர்களா யிருக்கும்படி நாம் பொறுப்பை ஏற்றுக்கொண்டு முயலாதிருந்த சோம்பலுமென்ன இருவகைப்படும் என்பது இக்கட்டுரையின் முதலிலேயே விளக்கப்பெற்று இருக்கின்றது.அந்தக் குணமும் இந்தச் சோம்பலும் நம்மைவிட்டு நீங்குவதற்கு, இவைகளின் காரணத்தால் விளைந்த காரியமாகிய பிறன்செய்த தீமையின்நினைவு நமது உள்ளத்தில் நிலைத்து இடைவிடமால் உறுத்திக்கொண்டிருப்பது சாலவும் நன்றென்றே நினைக்கின்றோம். அப்பொழுதே படுகொலைசெய்த அந்தக் கேய்னேபோலக் கொலைசெய்யப்பட்ட ஆபெல்லும், "என் சகோதரனுக்குப் பொறுப்பாளி நானோ" என்றகேள்விக்கு உடன்பாட்டுவிடை உரைக்கவேண்டுவதன் கடமையைச் செவ்விதின் உணர்ந்தவனாவான். உணர்ந்து அன்னதற்கு ஏற்றமுயற்சிகளை மேற்கொள்ள அப்பொழுதே அவன் உள்ளம் தூண்டியவண்ணமாயிருக்கும். இக்கடமை தமக்குண்டென்பதை நினைப்ப தரிதாயிருக்கின்ற இக்காலத்தில், "பொறுத்தல் இறப்பினையென்றும், மற்று, அதனைமறத்தலோ தீது" என அத்திருக்குறளினைச் சற்றே மாற்றிப் படித்தாலும் நல்லதாம்.

நமக்குத் தீமைசெய்தாரைப் பொறுத்தல் கடன்; மற்று, தீமை செய்யப்பட்டநாமோ நம்மையே பொறுத்துக்கொளல் ஒருபோதும் நன்றன்று. நாம் பிறருக்குச்செய்த தீமையை மறந்துவிடல் நன்று;மற்று, அத்தீமையைப் பொறுத்ததாகிய நன்மையை நாம் செய்தோம் என்பதை மறப்பது நன்றன்று. இன்னா செய்தாரைப் பொறுக்குந்தோறும் நாம் நாணவே நன்னயஞ் செய்துவிட்டோம் என்னும் ஒரு நினைவு நம்மைத் தூய்மைசெய்வதற்குச் சாலப் பயன்தரும். தான் உரைத்தவைகள் உண்மையாவதுமன்றி அவைகளுக்கு மறுநிலையானவைகளும் நன்மையாகும்படி அமைகின்ற பெருமை திருக்குறள்போன்ற திப்பிய நூல்களுக்கே நிரந்தரம் பொருந்தி நிற்கும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[711வது பக்கத் தொடர்ச்சி]

கோன்ரு லன்றே சான்றேன நிற்கும்.

அன்னவாறெலாம் புலம்பலுற் றழிந்த உள்ளத்த ளாய தாரை தலைநிமிர்ந்து தன்முன் நின்ற இராமனைக் காண்டலும், "இப்பெருமான்தான் இராமர் போலும்" என்று தன் மனத்துள் எண்ணி அவனை நோக்கி இவை இவை சில கூறினள் என்பார் வான்மீகி முனிவர்:—

"நீர் அளவை யெல்லாங் கடந்தவரும் அடைதற்கரியவரும் புலன்களை வென்றவரும் மேலான தருமத்தையுடையவரும் அழியாதபுகழ்படைத்தவரும் பேராற்றலுள்ளவரும் பூமிபோன்ற பொறுமையுள்ளவரும் இரத்தம்போலச் சிவந்தகண்களையுடையவருமாயிருக்கின்றீர். நீர் வில்லும் அம்புங் கையிற் பிடித்தவராயும் மிக்க வலியும் திண்ணிய தேகமும் உடையவராகவும் இருக்கின்றீர். மானுட ரூபத்தை விட்டுத் தேவவடிவம் பூண்டிருக்கின்றீர். என் நாயகனைக் கொன்றஅம்பினால் என்னையுங் கொன்றருளும். அவ்வாறு கொல்லப்பட்டால் நான் என் நாயகனைச் சென்று கூடுவேன். என்னையன்றி அவர் வேறு ஒருவரைச் சேரவிரும்பார். தாமரைக்கண்ண, அவர்தாம் சுவர்க்கம்சென்று என்னைக் கண்டுகொள்ளப் பெருதவராய், சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்த தேவரம்பையர் கூட்டத்தில் விழைவுறார். இந்த அழகிய மலையின் மத்தியில் வைதேகியைப் பிரிந்து வருந்தும் உம்மைப்போல் சுவர்க்கத்திலும் என் நாயகர் என்னைவிட்டுப் பிரிந்தமையால் வருந்தி ஒளியிழந்து தோன்றுவார். மனைவியைப்பிரிந்தஅழகியஒரு ஆண்மகன் அடையுந் துன்பத்தைநீர்நன்ருயறிவீர். ஆகையாலென்னைப்பிரிந்து என்நாயகன் அலக்கண் உருவண்ணம் என்னைக் கொன்றருளும். மகாத்துமாவாகியநீர் என்னைக்கொன்றால் பெண்கொலை செய்த பாவம் உமக்கு வந்துவிடுமென்று எண்ணுகின்றீர்போலும். என்னை வாலியின் ஆன்மாவாகப் பாவித்துநீர் கொல்லும்; அவ்வாறு செய்தால் நீர் பெண்கொலை செய்த பாவத்திற்குள்ளாகமாட்டீர். வேதங்களும் மற்றை நூல்களும் பத்தினி தன் பதியினின்றும் வேறல்லள் என்று கூறுகின்றனவே. பத்தினியை அவள் பதியின் இடத்திற்சேர்ப்பதிலும் சிறந்ததருமம் வேறில்லையென்று தருமநூலுணர்ந்தோர் கூறுகின்றனர். ஆகையினாலே நீர் என்னை எனது பதியினிடத்துச் சேர்த்துவிடும்; அப்படிச் செய்துவைப்பதால் நீர் பெண்கொலை செய்த பாவத்திற்கு ஆளாகமாட்டீர். நாயகனை இழந்து அவனின்றும் பிரிக்கப்பட்டு அலக்கண் உற்று வாடுகின்ற என்னைக் கொல்லாமலிருப்பது உமக்குத் தகுதியன்று. மதயானை போல்பவனும் பொன்மாலை யணிந்தவனுமாகிய அறிவிற் சிறந்த வாநரர் கோமகனைப் பிரிந்துநான் உயிர்வாழேன்."

தன் நாயகனைக் கொன்றவனைநோக்கி ஒருமனைவி தன்னையுங் கொல்லுமாறுவேண்டி முறையிடும் இது மிகவும் துன்பஇயல் வாய்ந்தது. இன்னவளை ஏற்ற சொற்கூறித்தேற்றுதல் எளியதன்று. எனினும், இராகவன் தாரையைத் தேற்றிய வகையினைப் பின்வருமாறு வான்மீகிமுனிவர் கூறுகின்றார்:—

"இவ்வாறு முறையிடப்பட்ட மகாத்துமாவாகிய இராமர் அந்தத் தாரையைநோக்கி, "வீரபத்தினீ, நீ கலக்கமுற வேண்டாம். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் கடவுள் ஆணையால் நடைபெறுகின்றது. உயிர்களுக்கு வருகின்ற இன்ப துன்பங்கள் அவர் ஏவலினால் வருகின்றன. இந்த மூன்று உலகங்களும் அவர் ஆணையின் வசப்பட்டனவன்றி அதனை மீறி நடப்பனவல்ல. உன்னுடைய குமாரன் இங்கு இளவரசனாக வைக்கப்படுவான்; அதனால் நீ இன்பமடைவாய். இது வரம்பில்லா ஆற்றலுடைய கடவுளால் விதிக்கப்பட்டுள்ளது. வீரபத்தினிகள் இவ்வாறு ஒருபோதும் கலக்கமுறார்" என்று இன்சொற் கூறித் தேற்றினார். இவ்வாறு பெருந்திறல் இராமரால் தேற்றப்பட்டு வீரபத்தினியாகிய தாரை அழுகை ஒழிந்தாள்."

பிறர் கூறியிருந்தால் ஒருகால் இச்சொற்கள் தகவுடையவைகளாகத் தோன்றலாம்—கொன்றவனே இப்படிக் கூறுவது பின்னுங் கொடுமையாய்த்தோன்றும். கொலைசெய்தவன் ஒவ்வொருவனும்இப்படியே, "இது வரம்பில் ஆற்றலுடைய கடவுளால் விதிக்கப்பட்டுளது" என்று கூசாமற்சாற்றித் தன்குற்றத்தோடு அக்குற்றத்தால் வருந்துவோர் துயரத்தையும் ஆற்ற முயல்வது நாத்தடித்த துணிவேயன்றி வேறொன்றுதலரிது. ஆயினும் இதனைக் கேட்டோ, அல்லது அங்கதன் இளவரசாகும் இன்பத்தை எண்ணியோ, தாரை அழுகை ஒழிந்தனள். மற்றுமொன்று; "மானுடவுருவத்தைவிட்டுத் தேவவடிவம்பூண்டிருக்கிறீர்" என்று சற்றுமுன் தாரை இயம்பியதை நினைக்குங்கால், ஒருகால் இராமன் தனது மெய்வடிவத்தை அவளுக்குக் காட்சிகொடுத்தானோ வென்றும், அந்தத் தேவனே வந்து இது தன் செய்கை என்று சொல்லும்போது இவள் அதனை ஏற்றுக்கொள்வது இயற்கையேயாம் என்றும் எண்ணவேண்டி யிருக்கின்றது.

கம்பர், வாலியின் வருத்தத்தைப் பெருக்கா வண்ணம் அவன் இறந்தபின்னரே தாரையைக் களத்தினுட் கொண்டுவருவதுபோன்றே, அன்னவள் துயரைக் கண்டும் அவள் புலம்பலைக் கேட்டும் நிற்கின்றவொரு இக்கட்டுடைய நிலையினின் றிராமனைக் காக்குங் கருத்தினராய், தாரை வருவதன் முன்னே இராமனை அக் களத்தினின்று போக்கிவிடுகின்றார்.

வாலியு மேகி னன்வின்
வரம்பிலா வாற்ற லோடும்
பாலியா முன்னர் நின்ற
பரிதிசேய் செங்கை பற்றி
ஆலிலைப் பள்ளி யானு
மங்கத னேடும் போனன்
வேல்விழித் தாரை கேட்டாள்
வந்தவன் மேனி வீழ்ந்தாள்.

தாரையின் துயரமோ மிகத் தூயது. அத்துயரத்தைச் செய்தவர் செய்துவித்தவர் முதலியோர் செவிகளிற் சேர வொண்ணுதன அவள் சொற்கள். மன்னவன்

'புதல்வனல்லன், மற்று, ஆலிலைப் பள்ளியானே இதனைச் செய்தவன் என்பதை நமக்கு மீண்டும் நினைவுறுத்திவைக்காவிடில், தாரையின் புலம்பலைக் கேட்பவர் மதிநனி மாழ்கி அவனை வெகுளினும் வெகுளலாமென அஞ்சியேபோலும் இராமனைக் கம்பரிங்கு அச்சொற்களோடு களத்தினின்று அகற்றுகின்றார்.

வந்தனள் தாரை. இரத்தம் பெருகிய வாலியின் மார்பின்மீது மின்னென விழுந்தனள். விழுந்து,

வேய்ங்குழல் விளிகொ ணல்யாழ்
வீணையென் றினைய நாண
ஏங்கின ளிரங்கி விம்மி
யுருகின ளிருகை கூப்பித்
தாங்கின டலையிற் சோர்ந்து
சரிந்துதாழ் குழல்க டள்ளி
ஓங்கிய குரலாற் பன்னி
யினையன வுரைக்க லுற்றாள்

[புள்ளாங்குழல் இசையமைந்த நல்ல யாழ் வீணை என்னும் இத்தகைய இசைக் கருவிகள் எல்லாம் நாணமடையும்படி, ஏங்கி இரங்கி விம்மி உருகி, தன் இரண்டு கைகளையும் தலைமேல்வைத்துத் தளர்ந்து, சரிந்து தாழ்கின்ற தன் கூந்தலைத் தள்ளிக்கொண்டு, உரத்த குரலினால் இந்த வார்த்தைகளைப் பன்னிப்பன்னிச் சொல்லலானாள்.]

வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலை காண்கலேன்
உரைசே ராருயி ரேயெ னுள்ளமே
அரைசே யானிது காண வஞ்சினேன்

[புகழ்வாய்ந்த என் அருமையான உயிர் போன்றவனே, என் உள்ளத்தில் இருப்பவனே, என் தலைவனே, மலை போன்ற உன்தோளினினிடையே என்றுந் தங்கி அதனால் கரையில்லாததோர் துன்பக்கடலை இதுவரையில்காணுதிருந்தவளான நான், இந்தக் கொடுமையைக் காண அஞ்சுகின்றேன்]

துயரா லேதொலை யாத வென்னையும்
பயிரா யோபகை யாத பண்பினேய்
செயிர்தீ ராய்விதி யான தெய்வமே
உயிர்போ னுலுட லாரு முய்வரோ

[என்னை ஒருபோதும் வெறுத்திராத பண்புடையவனே, இதுகண்டவளவிலே அத்துயரினால் உயிர்நீங்காத என்னையும் நீஅழைத்துக்கொள்ளமாட்டாயோ. என் விதியின்வடிவமான ஓ தெய்வமே, கணவன் இறந்தும் உயிர்விட்டிலள் என்னும் குற்றம் எனக்கு நேராமல் தீர்க்கமாட்டாயோ! உயிர்போனபின் உடல் பிழைத்திருக்க முடியுமோ]

நறிதா நல்லமிழ் துண்ண நல்கலிற்
பிறியா வின்னுயிர் பெற்ற பெற்றிதாம்
அறியா ரோநம னா தன்றெனிற்
சிறியா ரோவுப காரஞ் சிந்தியார்

[யமனானவர், நறுமணமுள்ள நல்ல அமிர்தத்தைத் தாம் உண்ணும்படி நீகொடுத்ததனால், தமது இனியஉயிர்நீங்காததாகிய தன்மையை அறிந்திலரோ. அன்றெனில், உபகாரத்தை நினைக்காத அற்பகுணமுடையவரேதானோ]

அணங்கார் பாகனை யாசை தோறுமுற்
றுணங்கா வொண்மலர் கொண்டு ளன்பொடும்
இணங்காக் காலமி ரண்டொ டொன்றினும்
வணங்கா தித்தனை வைக வல்லையோ

[திக்குக்கள்தோறும் சென்று, உள்ளன்போடுகூடி, வாடாமல் விளங்குகின்ற மலர்களைக்கொண்டு, பார்வதியைத் தன்பாகத்தில் கொண்டுள்ள சிவபிரானை முக்காலத்திலும் வணங்காமல், இவ்வளவுநேரம் சும்மா இருக்கவும் உன்னால் முடிகின்றதோ]

அரைசே பூவணை யாடை வைகுவாய்
தரைமே லாயுறு தன்மை யிதெனக்
கரைவே னின்றிடு பூசல் கண்டுமொன்
றுரையா யென்வயி னூனம் யாவதோ

[என் தலைவனே, மலர்ப் படுக்கையில் மெல்லிய துணியின்மீது படுப்பவனாகியநீ தரைமேல் கிடக்கின்ற தன்மை இதுவோவென்று மனங் கரைகின்றவளாகி நான் உன்னெதிரே நின்று அரற்றுகின்ற அழுகையைக் கண்டும் நீ ஒருவார்த்தையும் சொல்லாம லிருக்கின்றாயே. அவ்வாறு நீ என்னை வெறுக்கும்படி நான் செய்த குற்றம் யாதோ!]

நையா நின்றன னினி ருந்திங்ஙன்
மெய்வா னோர்திரு நாடு மேவினாய்
ஐயா நீயென தாவி யென்றதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா

[பொய்பேசியறியாத புண்ணியனே, நான் இங்கிருந்து இப்படித் தளர்கின்றேன். நீயோ மெய்யான தேவர்கள் வசிக்கும் திருநாட்டை விரும்பி அடைந்துவிட்டாய். ஐயனே, 'நீ என்னுடைய உயிர்' என்று என்னைப் பாராட்டியதெல்லாம் பொய்யோ]

செருவார் தோளநின் சிந்தை யுளெனெனின்
மருவார் வெஞ்சர மெனையும் வௌவுமால்
ஒருவே னுள்ளுளை யாகி லுய்தியால்
இருவே முள்ளிரு வேமி திருந்திலேம்

[போர்த்தொழில் நிரம்பிய தோள்களை யுடையவனே, உன் உள்ளத்தில் நான் இருந்தேன் என்பது உண்மையானால், பகைவரது கொடிய அம்பு என் உயிரையும் வாங்கியிருக்கும். என் உள்ளத்தில் நீ இருந்தது உண்மையானால் நீயும் பிழைத்திருப்பாய். இப்படி நேரவில்லையாகையில் நாம் இருவரும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இருந்ததில்லையென்பது தெரிகின்றது]

எந்தாய் நீயமிழ் தீய யாமெலாம்
உய்ந்தா மென்றுப கார முன்னுவார்
நந்தா நாண்மலர் சிந்தி நண்பொடும்
வந்தா ரோவெதிர் வானு ளோரெலாம்

[எம்தலைவா, நீ அமிர்தத்தைக் கொடுக்க அதனா லல்லவோ நாங்கள் எல்லாரும் வாழப்பெற்றோம் என்று முன்பு நீசெய்தஉபகாரத்தைஎண்ணித் தேவர்கள் அனைவரும் வாடாத புதியமலர்களைச்சொரிந்து அன்போடு உன்னைஎதிர்கொண்டனரோ]

ஓயா வாளி யொளித்துநின் றெய்வான்
ஏயா வந்தவி ராம னென்றுளான்
வாயா லேயின னென்னின் வாழ்வெலாம்
ஈயா யோவமிழ் தேயு மீகுவாய்

[அமிர்தத்தையும் நீ உண்ணுவதின்று மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டவனே, ஓயாதஅம்பை மறைந்துநின்றெய்வதற்கு உடன்பட்டுவந்த அந்த இராமனானவன், தனது வாய்மொழியால் இன்னது தருகவென்று உன்னைக்கட்டளையிட்டிருப்பானால் உன்னுடைய வாழ்வனைத்தையுமே கொடுத்திருக்க மாட்டா[illegible]]

82
M241,N24KN
N24-2·46.
199196

சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
அற்று என்னது செய்க லானெனு
உற்று யும்பியை யூழி காணுமீ
இற்று யானுனே யென்று காண்கெனே

[முன்னமேசொன்னேன், அச்சொல்லை நீயோ கேட்கவில்லை. இராமன் அப்படிச் செய்யமாட்டான் என்று உன் தம்பியுடன்போர்செய்யப்போனாய். கற்பகாலத்தைக்காண வேண்டிய நீ இறந்துவிட்டாய், நான் உன்னை இனி எந்த நாள் காண்பேன்]

நீறு மேருவு நீநெ ருக்கினல்
மாறோர் வாளியுன் மார்பை யீர்வதோ
தேறேன் யானிது தேவர் மாயமோ
வேறோர் வாலிகொ லாம்வி ளிந்துளான்

[நீ நெருக்கினல் மேருமலையும் பொடியாய்விடும். எனின், உனக்கு மாறாக உன் மார்பையும் ஒரு அம்பு பிளக்குமோ. உண்மை தெரியவில்லையே. இது தேவர்கள் செய்த மாயமோ, அல்லது, இங்கு இறந்துகிடப்பவன் வேறு ஒரு வாலியோ]

தகைநேர் வண்புகழ் நின்று தம்பியார்
பகைநேர் வாருள ரான பண்பினல்
உகநேர் சிந்தியு லந்த யீந்தவான்
மகனே கண்டிலை யோநம் வாழ்வெலாம்

[அங்கதனே, தம்பியாகிய சுக்கிரீவன், பெருமை பொருந்திய சிறந்த வாலியின் புகழிலே அவனுக்குத் தம்பியாகத்தங்கியிருந்து பிறகு, பகைமைகொண்டபடியால், உன் தந்தை இறக்கவே நமது வாழ்வெல்லாம் நேர்மைகெட்டு அழிந்துபோயதை இன்னும் நீ காணவில்லையோ.]

அருமந் தற்றம கற்றும் வில்லியார்
ஒருமைந் தற்கும டாத துன்னினர்
தருமம் பற்றிய தக்க வர்க்கெலாங்
கருமங் கட்டளை யென்றல் கட்டதோ

[பிறரது ஆபத்தை அருமருந்துபோல் நீக்கியுதவுகின்ற வில்லையேந்திய இராமன், எந்தஒரு வீரனுக்கும் அடுக்காததைச் செய்யநினைத்தார். தருமத்தை மேற்கொண்ட பெரியோர்களுக்கெல்லாம் அவருடையசெய்கையே கட்டளைக்கல் ஆகுமென்பது இவர்பால் பொருந்தாமற் போய்விட்டது.]

ஆம். தான் உன்னியதே தனக்குத் தருமம் என்ற அவ்வொரு தனிப்பொருளுக்குக் கருமங் கட்டளையென்றல் ஒருபோதும் அடுக்காது. ஓர் அரசன் தன்னைச்சார்ந்தமந்திரிமுதலாயினோரைத் தெரிந்துதெளிகின்ற உபாயங்களில் ஒன்றாக, சாணக்கியதந்திரத்தைத் தழுவித் திருவள்ளுவர், "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் கருமமே கட்டளைக்கல்" என்று கூறிய அப்பொருட்பால்செய்தி இராமனுக்கு இயலலாமை இவ்வயின் இயம்பப்பெறுகின்றது. தெய்வவுணர்வு கொள்ளமாட்டாதார் திறத்திற்கே பொருட்பால் சூழ்ச்சிகள் பொருந்துமாதலால் கம்பர் அன்னவர்க்கே உரியதாய் இவ்விதிகளை வரவழைப்பார். தான் புகட்டிய மெய்யுணர்வு சுக்கிரீவன் மனத்துள் புகாமை கண்டபின்னர் வாலி, 'எரியனற் குரியர் மன்னர்' என்றும், "சிற்றடிமை குற்றம் பொறுப்பரென்றெண்ண வேண்டா" வென்னவும், மன்னரைச்சேர்ந்தொழுகும் செய்திகளை எடுத்துச் செப்பலுற்றான். "என்னடியார் தீதுசெய்யார், செய்தாரேல் அதுவும் நன்றாம்" என்னத் தன்னடியவரைஏற்றுக்கொள்ளுந் திருநெடுமால் ஆவான் இவ்விராமன் என்பதை ஐயமற அறிந்திருந்த வாலி, அதனை நம்பமாட்டாமல் சிறியன சிந்திக்கின்ற ஒரு தம்பியை மருட்டுதற்குரியவோர் உபாயமாகவே அப்பொருட்பால் வாசகங்கள் அவனால் பயன்செய்துகொள்ளப்பெற்றன. அன்ன சுக்கிரீவனை இன்னஇராமன் தஞ்சமடைந்தனன்என்பர் வான்மீகிமுனிவர். ஆயினும் என், "லோகநாத: சுக்ரீவம் நாதம் இச்சதி." அன்றோ! எம்பெருமானுடையபெருமைக்கவன் இச்சையே அன்றிக் கருமமன்று கட்டளைக்கல் லாகவல்லது. இதுவே கற்பின் காட்சி.

அருமை மனைவியரில் தாரையை வென்றவர் வேறில்லை. அங்கதனைப்போன்றே இவளும் வாலியின் சிவபக்தியையும் அமுதீந்த வண்மையையும் ஆற்றலையும் சாற்றிச்சாற்றிப் புலம்பினள். "சிந்தையாற் செய்கையால் ஓர் தீவினை செய்திலாதாய்" என்றான் மைந்தன். வான்மீகத்தில் வந்த தாரையைப்போலன்றி இவள், வாலி தான்செய்த பாவத்திற்காளாயினனென்னுங்குறிப்பு இறையுமின்றியே தன்மொழிகளையியக்கினள். கணவனது அற்றம் மறைத்த ஓர் கற்புடை மனைவியின் காரியம் இது என்று எண்ணலாகாது. வாலியின்பால் யாதும் (கம்பர் நூலின்படி) குற்றமிலாமையே இவளன்னது பேசாமைக்குக் காரணம். இராவணனை நினைந்தது மறந்தது மிலாத நெஞ்சினளாகி, அவனோடு தன்னுயிரும் நீங்கிய பத்தினி மண்டோதரி, அவனுடலத்தைத் தழுவிக்கிடந்து புலம்புநாள்,

கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து
தடவியதோ வொருவன் வாளி

என்ன, இராவணன் இழைத்த பாவத்தை இரக்கமுடனேனும் நினைத்துரைக்க நேர்ந்தனள். இந்தக் குற்றம் இராவணனுக்கு இருந்த உண்மைபற்றியே மண்டோதரி, பேராற்றல் பெருவரத்து இராவணனுக்கும் ஓர் இறுதி வரலாயிற்றே என்று வியந்தாளேனும், அன்னவன் வீழ்ச்சி இயற்கையே என்றோர் அமைதியுங் கண்டவள்போல் ஆயினள். அவ்விராவணனையும் வாலிற்கட்டிய ஆற்றலுடையவன் வாலி; கடவுளர் வரங்களில் அவனுக்குக் குறைந்தானு மல்லன்; கொலையுண்ணற்குரிய குற்றமோ வொன்றும்புரியாதவன். எனின், அன்னவன் வீழ்வானென்று அவன் உண்மை மனைவி தாரை எங்ஙனம் எண்ணுவாள்! "வேறோர் வாலிகொலாம் விளிந்துளான்" என்று திகைத்துவிட்டாள் இவ்வேழை. இராமனே மெய்ப்பொருள்என்பதற்கு, "எற்கொன்ற வலியேசாலும்" என வாலி நிறுவியசான்றும் பேதை இம்மனைவியின் புலம்பலால் தளர்வடைகின்றது.

தமிழ்ப்பாடம் 146.

[709-வது பக்கத் தொடர்ச்சி]

னகர மெய்யீறு.

III நிலைமொழியிறுதியில்னகரமெய் + வருமொழி முதலில் வல்லின மெய்:—

(a) வருமொழிமுதலில் ககர சகர பகர மெய்களும், நிலைமொழி யிறுதியில் னகர மெய்யும்.

i ஆறும்வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள், பண்புத்தொகை ஆகிய இத்தொடர்களில், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள்வர நிலைமொழியீற்று னகரமெய், றகரமெய்யாகத் திரிந்து புணரும் என்று பொதுவாகக் கூறலாம்.

பொன் + பொலிவு = பொற்பொலிவு —ஆறும் வேற்றுமைத் தொகை.

பொன் + குடம் = போற்குடம் — 3-ம் வேற்றுமைஉருபும்பயனும்உடன்தொக்க தொகை.

முன் + பிறப்பு = முற்பிறப்பு } பண்புத்
பின் + பகல் = பிற் பகல் } தொகை.

பொதுவிதி இதுவாயினும் தமிழில் பயில்கின்ற னகரமெய்யீற்றுப்பெயர்ச்சொற்களின் பெரும்பகுதி இவ்விதிக்குமாறாகவேபுணரக்காண்கின்றோம். அவைகளிற் சில வருமாறு:—

(1) வான் ஊன் மான் மீன், ஆகியஇச்சொற்களின் ஈற்று னகரமெய் ஒருபொழுதும் றகர மெய்யாகத் திரியாது:—

வான் + சிறப்பு = வான் சிறப்பு.
ஊன் + சுவை = ஊன் சுவை.
மான் + கால் = மான் கால்.
மீன் + கண் = மீன் கண்.

குறிப்பு:—மீன்என்ற சொல்லின் ஈற்று னகரமெய் றகரமாகத்திரிந்து புணர்வது இக்காலத்திலில்லையேனும், பழைய வழக்கத்தை நோக்குங்கால், மீற்கண் எனப் புணரினும் பிழையாகாது.

(2) ஆன் கோன் கான் போன்ற சொற்களில் சாரியையாய் ஈற்றில் நிற்கும் னகரமெய் வருமொழி முதலில் வல்லினம்வர றகரமாகத் திரியாது.

ஆன் + கன்று = ஆன் கன்று.
கோன் + குணம் = கோன் குணம்.
கான் + கோழி = கான் கோழி.

(3) மகன் வேந்தன் அரசன் போன்ற உயர்திணைப் பெயர்களின் ஈற்று னகரமெய், வருமொழிமுதலில் வல்லினம் வர, றகரமாகத் திரியாது.

மகன் + பெருமை = மகன் பெருமை. (மகற்பெற்றவர் என வருதலும் உண்டு)
வேந்தன் + கவிகை = வேந்தன் கவிகை.
அரசன் + சிறப்பு = அரசன் சிறப்பு.
மகன் + பரதன் = மகன் பரதன்—மகனாகியபரதன் என விரியும்இது பண்புத்தொகை,

(4) எகின் (அன்னம்), குயின் (மேகம்), அலவன் (நண்டு), கலுழன் (கருடன்), எயின் (வேட்டுவசாதி), அழன் (பிணம்) என்னும்இவ்வஃறிணைப்பெயர்களின் ஈற்றிலுள்ள னகரமெய்யும், வருமொழிமுதலில் வல்லினமெய்கள் வர, றகரமாய்த் திரியாது.

எகின் + சிறை = எகின் சிறை (இது எகினச்சிறைஎன அகரச்சாரியைபெற்றுப்பெரும்பாலும் புணர்கின்றது)
குயின் + கருமை = குயின் கருமை.
அலவன் + கால் = அலவன் கால்.
கலுழன் + சிறகு = கலுழன் சிறகு.
எயின் + குடி = எயின் குடி (எயினக்குடி என அகரச்சாரியை பெற்றும் புணரலாம்).
அழன் + பானை = அழன் பானை,—இது அழப்பானை என ஈறுகெட்டும் புணரலாம்.

(5) மின் (மின்னல்); பின் (பெருமை, வழி, காரணம்); பன் (ஓர்வகைப் புல்); கன் (தராசுத்தட்டு) என்னுஞ்சொற்களின்ஈற்றிலுள்ளனகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர றகரமாகத் திரியாது.

மின் + காட்சி = மின்காட்சி
பின் + குலம் = பின்குலம்—பின்னை உடைய குலம் என விரியும் இது, இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை (பின் = பெருமை).
பன் + கட்டு = பன்கட்டு.
கன் + குழிவு = கன் குழிவு.

குறிப்பு:—இவை, மின்னுக்காட்சி, பின்னுக்குலம், பன்னுக்கட்டு, கன்னக்குழி, என உகரச்சாரியையும் அகரச்சாரியையும் பெறலாம்.

(6) நின், உன், என்னுஞ்சொற்களின் ஈற்றிலுள்ள னகரமெய், வருமொழிமுதலில் வல்லினம் வர, றகரமெய்யாகத் திரியாது.

நின் + பிறப்பு = நின் பிறப்பு.
உன் + குலம் = உன் குலம்.
நின் + சிரம் = நின் சிரம்.

குறிப்பு:—ஆனல், தன் நின் என்னுஞ்சொற்களின் ஈற்றிலுள்ள னகரமெய் வருமொழிமுதலில் வல்லினமெய்வர, றகரமாகத்திரிந்தேனும், திரியாமல் இயல்பாகவேனும் புணரலாம்:—

தன் + புகழ்ச்சி = தன் புகழ்ச்சி, தற்புகழ்ச்சி
நின் + பகை = நின்பகை, நிற்பகை.

ii. முன்னுரைத்துள புறநடைகளுக்கு அடங்கியபடி ஆறும்வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும் பயுனும் உடன்தொக்க தொகை, பண்புத்தொகை, ஆகிய இம்மூன்று தொடர்களிலும் தவிர மற்றையதொடர்களிலெல்லாம், வருமொழிமுதலில் வல்லினமெய் வர நிலைமொழியீற்றுனகரமெய், றகரமாகத்திரியாமல் இயல்பாய்ப் புணரும் என்று ஒருவாறு கொள்ளலாம்.

பொன் + பிரகாசித்தது = பொன்பிரகாசித்தது } எழுவாய்
நான் + செல்வேன் = நான் செல்வேன் } த்தொடர்
பயன் + கண்டேன் = பயன் கண்டேன்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.
பொன் + கல் = பொன்கல் (பொன்னுங் கல்லும்—உம்மைத்தொகை)
காண்பான் + சென்றேன் = காண்பான் சென்றேன்—வினையெச்சத் தொடர்.

தின் + சோறு = தின் சோறு—வினைத்தொகை.
கூறுவான் + புதல்வன் = கூறுவான் புதல்வன்—வினை
முற்றுத் தொடர்.

குறிப்பு:—னகரமெய்யை ஈற்றிலுடையவேற்றுமை உருபு சாரியை விகுதி அசைநிலை, அனைய இடைச் சொற்களோடு வருமொழிமுதல்வல்லினமெய்புணர்வதற்குரிய விதிகள் சில நினைவிற்கொள்ளவேண்டும்:-

(1) முன், வயின், என்னும் ஏழாம் வேற்றுமை உருபிலும், இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபிலும், ஆன் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபிலும், ஈற்றிலுள்ள னகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர, எல்லாத் தொடர்களிலும், றகரமாகத் திரியும்.

பல்லார்முன் + செல்லல் = பல்லார்முற்செல்லல்
நின்வயின் + பெற்றேன் = நின்வயிற்பெற்றேன்.

குறிப்பு:—பின் என்னும் உருபின் ஈற்று னகரம் திரிவதில்லை.

காதலிபின் + சென்றமனம் = காதலிபின்
சென்றமனம்;

முன், பின், என்னும் இடப்பொருளுடைய உருபுகளுக்கே இவ்விதி பொருந்தும். இவை உருபுகளாய் நிற்காமல் இடம் அல்லது காலத்தையே குறிக்கும் சொற்களாய் வழங்கும்போது, முன்கை பின்புறம், எனத் திரியாமலும், முற்காலம், பிற்பயக்கும் என்று திரிந்தும் வரக் காண்கின்றோம்.

இன் என்னும் ஐந்தாம்வேற்றுமை உருபின் ஈற்றிலுள்ள னகரமெய், சிலபோது திரிந்தும் சிலபோது திரியாமலும் புணரும். எல்லைப்பொருளில் மாத்திரம் திரியாதென்றும், நீங்கல் ஒப்பு ஏதுப்பொருள்களில் திரியுமென்றுங் கொள்ளலாம்.

சென்னையின் + கிழக்கு = சென்னையின்கிழக்கு
—எல்லைப் பொருளில் திரியவில்லை.
அரசரின் + பெரியவர் அந்தணர் = அரசரிற்
பெரியவர்—நீங்கல் பொருள்.
காக்கையின் + கரியது களாம்பழம் = காக்கை
யிற் கரியது—ஒப்புப்பொருள்
கல்வியின் + பெரியவர் கம்பர் = கல்வியிற் பெரி
யவர் கம்பர்—ஏதுப்பொருள்.

எனினும், ஐந்தாம்வேற்றுமை இல் உருபின் ஈற்று லகரந்தான் றகரமாகத்திரிந்து, அரசரிற் பெரியவர், காக்கையிற் கரியது, கல்வியிற் பெரியவர், என ஆயிற்றோ என்னும் ஐயத்திற்கும் இவையனைய உதாரணங்களில் இடமுளது.

ஆன் என்னும் மூன்றாம் வேற்றுமை ஈற்று னகரமெய் றகரமாகத் திரிந்து புணரும்.

கண்ணான் + கண்டேன் = கண்ணாற் கண்டேன்.

இதனினும், ஆல் உருபின் ஈற்று லகரந்தான் றகரமாய்த்திரிந்து கண்ணாற் கண்டேன், எனப்புணர்ந்ததோ என்றையுறுதற் கிடமுளது.

(2) அன் இன் தன் தான் ன், என்னுமிச் சாரியைகளிலுள்ள ஈற்று னகர மெய் றகரமாகத் திரியாது.

ஒன்றன் + கூட்டம் = ஒன்றன் கூட்டம்.
பொன்னின் + சோதி = பொன்னின் சோதி.
வண்டின் + கால் = வண்டின்கால்.
மனைவிதன் + கற்பு = மனைவிதன் கற்பு.
பிள்ளைதான் + பெற்றாள் = பிள்ளைதான்பெற்றாள்.
ஆன் + கன்று = ஆன் கன்று.

(3) மன், இசின், என்னும் அசைநிலைகளி னீற்றிலுள்ள னகரமெய் றகரமாகத் திரியும்.

இதுமன் + கொண்கன்தேர் = இதுமற் கொண்கன்
தேர்.
பூண்டிசின் + கடையும் = பூண்டிசிற் கடையும்

(4) வினையெச்ச விகுதிகளில் வான் பான் என்னும் இரண்டின் ஈற்றினிள்ள னகரமெய் றகரமெய்யாகத் திரியாது. இன் என்னும் விகுதியின் ஈற்றில் உள்ள னகரமெய் மாத்திரம் திரியும்:—

கொல்வான் + புகுந்தான் = கொல்வான் புகுந்தான்.
காண்பான் + சென்றான் = காண்பான் சென்றான்.
கொடுப்பின் + கொள்வேள் = கொடுப்பிற் கொள்
வேன்.

(5) வினையாலணையும் பெயர்களின் ஈற்றிலுள்ள னகரமெய் றகரமாகத் திரியாது.

கொள்பவன் + கொடுக்கமாட்டான் = கொள்ப
வன் கொடுக்கமாட்டான்.
கொன்றான் + பழி = கொன்றான்பழி (கொன்ற
வனுடைய பழி)

குறிப்பு:—எவ்வகைப் பெயரின் ஈற்றிலுள்ள னகரமெய்யும், நான்காம் வேற்றுமை கு உருபு ஏற்கும்போது றகரமெய்யாய்த் திரியும்.

மன்னன் + கு = மன்னற்கு.
மகன் + கு = மகற்கு.
அவன் + கு + அவற்கு.
கண்டேன் + கு = கண்டேற்கு.
நின்றான் + கு = நின்றாற்கு.

மன்னற்கு, என வல்லின றகரம் வந்தசொல் மன்னன் + கு எனப்பிரியுமாகையால் ஒருமையென்றும் மன்னர்க்கு என இடையின ரகரம் வந்தசொல் மன்னர் + கு எனப்பிரியுமாகையால் பன்மை யென்றும் தேர்ந்துகொள்ளல் வேண்டும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து 1-ம் தசகம்.
[701-வது பக்கத் தொடர்ச்சி]
2-ம் பாசுரம்.

என்னையாளும் வன்கோ வோரைந் திவைபெய்
திராப்பகல் மோதுவித்திட்டு
உன்னை நானுனு காவகை
செய்து போதி கண்டாய்
கன்னலே யமுதே கார்முகில்
வண்ணனே கடல்ஞாலங் காக்கின்ற
மின்னு நேமியினாய்
வினையேனுடை வேதியனே

உரை:—கன்னலே - கற்கண்டுக்கட்டிபோல் உன் ஸௌந்தரியத்தாலும் பிரிய தர்சனத்தாலும் போகத்துக்கு இனிப்பாயிருப்பவனே, அமுதே-தெவிட்டாமல் அநுபவித்தற்குக் கூடியவனே, கார்முகில்வண்ணனே - பக்தர்களுக்குப் பலவித உபகாரங்களையு மவர் வேண்டிக்கேட்கா திருக்கையிலே மேகம்போல் உதவுகிறவனே, வண்ணம்-ஸ்வபாவம், கடல்ஞாலம்-உலகமெல்லாம், காக்கின்ற-இரக்ஷிக்கின்றதின்பொருட்டு, நேமியினாய்-சக்கராயுதத்தைத் தரித்துக்கொண்டிருப்பவனே, வினையேன்-உன்னைக் கிட்டவொட்டாத பாபங்களை இயற்றி அகன்றிருக்கின்ற அடியேனுடைய, வேதியனே - வேதப்பிரமாணங்களினால் திருடமாய் நிஷ்கரிக்கப்பட்டவனே, மேல்கண்ட குணங்களை அடுக்கிட்டுப்பேசுவது, இவ்வளவு குணங்களும் சக்திகளுமுனக்கு இருந்ததேயாகிலும் இப்போதென்னை இந்திரியங்களையிட்டுஹிம்ஸிக்கிறாயென்றுதாம்பயப்படுவதை விண்ணப்பம் செய்வதின் நோக்கம். என்னை - உனக்கே உரித்தானவனும் உன் தாஸனுமாகிய என்னை, ஆளும்-ஐந்து இந்தரியங்களும் தங்கள் தங்களுக்காளாக்கி அவ்வவற்றிற்கு வேண்டுகிற காரியங்களில் ஏவி இழுக்கும், ஓர் - அதிசயமான, வன் - வன்மையுள்ள பிரபலமான, கோ - இராஜாக்களாய், நீ ஏக இராஜ்ஜியமாய் ஆளவேண்டிய தாஸனை ஐந்து பேர் வழிகளை விட்டு நடாத்துகின்றாய்; உன் தாஸனைக் காப்பாற்றாமல் நீ வேறொருகையில் காட்டிக்கொடுப்பது உசிதமன்று என்று கூறு நிந்திக்கின்றபடியாம். என்னுடைய ஏவல்களைச் செய்யவன்று எனக்கு ஐம்புலன்கள் இருப்பது; என்னை அவர்கள் தம்வசமாக்கி அவற்றின் அபேக்ஷைகளைச்செய்து கொடுக்க ஆளாய் விட்டேனே என்று சோகிக்கிறபடி; இவை - இவ்விந்திரியங்கள், பெய்து - மழைபோலத் தாக்கி, இராப்பகல், ஒழிவில் காலமெல்லா மடிமைசெய்யவேண்டுமென் றெண்ணப்பட்ட அடியேன்மேல், மோதுவித்திட்டு - மிகவும் பீடித்து, உன்னை நான் - உன்னையேயடைய எண்ணங்கொண்ட என்னை, அனுகாவகை - கிட்டாதபடி - செய்து முடித்து, போதி கண்டாய் - நீ உன்னை என் கண்களுக்குக் காட்டாதே ஒளித்துக் கொண்டு போகையும் செய்துவிட்டாய்.

கருத்து:—இந்தப்பாசுரத்தில், இந்திரியங்களுக்கு என்னை யாளாக்கி அவற்றையிட்டு என்னை ஹிம்ஸிக்கிறாய்-இதனால் நான் உன் திருவடிகளைச் சேராதபடி பண்ணப்போகிறாயென்று பயப்படாநிற்கிறேனென்கிறார்.

3-ம் பாசுரம்

வேதியா நிற்குமைவரால் வினையேனை
மோதுவித்துன் றிருவடிச்
சாதியா வகைநீ தடுத்தென்
பெறுதி யந்தோ
ஆதியாகி யகலிடம்படைத்
துண்டுமிழ்ந்து கடந்திட்ட
சோதி நீண்முடியாய் தொண்ட
னேன்மது சூதனனே

உம்மை இந்தப்பிருகிருதியில் வைத்திருப்பதுஒரு காரணம்பற்றி - அதாவது உலகுக்கு உபகாரார்த்தமாக ஆழ்வார் திருவாய்மொழியை முடித்துப் பக்தர்களுடைய காலக்ஷேபத்துக்கு உதவவேணுமென்று "தொண்டருக்கமுதுண்ணச்சொன் மாலைகள்சொன்னேன்" என்றல்லவோ இம்மஹானின்ஸ்வயபாசுரம்.

பதவுரை:—ஆதியாகி - எல்லா வஸ்துக்களுக்கும் காரணபூதனாய், அகலிடம் - இப்பெரிய உலகத்தை, படைத்து - முதலில் சிருஷ்டிசெய்து, உண்டு - பிரளயத்திலே தன் வயிற்றில் வைத்துக் காப்பாற்றி, உமிழ்ந்து - பிறகு புனர்சிருஷ்டிகாலத்தில்வெளிப்படுத்தி, நடந்து - திருவிக்ரமனாகித் தன்னுடையசொத்தென்று அளந்து, இடந்திட்ட-பாதாளத்தில் ஜலார்ணவத்தில் முழுகிப்போனபோது வராஹரூபனாய்த் தன் கோடுகளினால் தூக்கி மிதக்கவைத்து, இதெல்லாம் எடுத்துப்பேசுவது இவ்வளவு ஸர்வசக்தியுள்ள வுனக்கு என்னாலேயே ஒரு காரியம் அமையவேண்டுமென்ற திருவுள்ளம் பற்றல்வேண்டாவென்றுவேண்டிக் கொள்கிறபடி. ஜோதிநீள்முடியாய் - மஹாதேஜஸை பொருந்திய கிரீடத்தை இராஜாதிராஜன் தானென்று எவரும் காண முடிசூட்டிக்கொள்கின்றவனே, தொண்டனேன் - தொண்டு புரிவதில் ஆசையுள்ளவனான அடியேன், மதுசூதனனே - பகவானை யழைக்கின்றபடி; வேதியா-மாமிசத்தைப் பிளப்பதுபோன்று, நிற்கும் - ஹிம்ஸிக்குந் தன்மையையுடைய, ஐவரால் - பஞ்சேந்திரியங்களால், வினையேனை - வெகு பாவங்களை யியற்றிய வென்னை, மோதுவித்து - தாக்கி, உன் திருவடி - கிடைப்பதற்கரிதான உன் திருப்பாதங்களை, சாதியாவகை - எனக்குத் தந்தருளாமல், தடுத்து - தடைசெய்து, நீஎன் பெறுதி - என்ன பிரயோஜனத்தையடையப்புகுகின்றாய்; அந்தோ - பகவானுக்கு இதனால்இலாபமொன்று மில்லையேயென்று பரிதபிக்கின்றபடி.

4-ம் பாசுரம்.

சூதுநா னறியாவகை சுழற்றியோ
ரைவரைக் காட்டி யுன்னடிப்
போதுநா னணுகாவகை செய்து
போதி கண்டாய்
யாதும் யாவரு மின்றிநின்
னகம்பா லொடுக்கியோ ராலினீளிலை
மீதுசேர் குழவி வினையேன்
வினைதீர் மருந்தே.

பதக்குறிப்புக்கள்:—யாதும் யாவருமின்றி-ஜகப்பிரளயத்தில் ஒரு வஸ்துவும் ஒரு ஆத்மாவும் அதாவது சேதநாசேதனங்கள் ஒன்றும் காணாதபடி, நின் அகம்பால் - உன்னுடைய உடலில், பால் 7-ம் வேற்றுமையுருபு, ஒடுக்கி - சேர்த்து, ஓர் - எவ்விடத்திலிருந்து எவ்வண்ணம் வந்ததென்று தெரியக் கூடாத, ஆலின் நீள் இலை - அப்போதே துளிர்தெசைமாறி இலையாகும் பருவத்தில் தனக்கு உசிதமான துளிரிலும் பெரிதாய் நீண்ட இலைப்பருவத்தில் உள்ள இலையின்மீது, சேர் - கண்வளர்ந்தருளி, குழவி - குழந்தைப் பருவமாய்த் தோன்றினவனே, வினையேன் - பாபங்களை உருவெடுத்தாப்போலுள்ள என், வினை - உன்னைச் சேருவதற்குத் தடையாயுள்ளபாபங்களை, தீர்மருந்தே-

தீர்க்கவல்ல அருமருந்தே, சூது - நல்ல சூழ்ச்சி, பலனடைவதற்குத் தக்க சாதுரியம். திருவடிகளே தக்க உபாயமென்றும் அதற்குத் தாம் செய்த சரணாகதி உபாய அனுட்டானம் உரித்தென்றும் தக்கதென்றுமுள்ள ஞானமுங்கூட, சுழற்றி - பிரமிக்கும்படி செய்ய, ஐவரை காட்டி-பஞ்சேந்திரியங்களால் பிடிக்கச் செய்து, உன்னடிப்போது - உன்னுடைய தாமரை போன்ற திருவடிகளை,நானணுகா வகைசெய்து-நான் கிட்டாதபடி செய்து, போதி கண்டாய் - எனக்குத் தோற்றாதபடி போய்விட்டாய் - ஆழ்வார் திருவுள்ளத்தில், பகவான் தத்காலம் கூவிக்கொள்வதில்லை யென்று நிச்சயித்துவிட்டானென்று அபிப்பிராயம்.

5-ம் பாசுரம்.

தீர்மருந் தின்றியைந்து நோயடுஞ்
செக்கிலிட்டுத் திரிக்கு மைவரை
நேர்மருங் குடைத்தா யடைத்து
நெகிழ்ப்பா னொக்கின்றாய்
யார்மருந் தினியாகுவா ரடலாழி யேந்தி
யசுரர்வன்குலம்
வேர்மருங் கறுத்தாய் விண்ணுளார்
பெருமானேயோ.

உரை:—அடல் - வெது பராக்கிரமசாலியான - ஆழி - சக்கராயுதத்தை, ஏந்தி - கையிலெடுத்து வீசி, அசுரர்வன்குலம் - எவ்வளவு தொலைத்தாலும் வளர்ந்து பெருகும் இராக்ஷஸகுலங்களை, வேர் மருங்கு அறுத்தாய் -நடுவேர் என்ன, மருங்கு -பக்கவேர்கள் என்ன இவைகளைமுழுவதும் நிசேஷமாகத்தொலைத்தவனே! தீர்மருந்தின்றி - உலகெல்லாம் பீடிக்கும் ராக்ஷஸர்களைத் தொலைத்தவனே எனக்கு உதவாமல் போன பின்பு எனக்கு ரக்ஷகர் யாவரிருக்கிறார்களென்னும்படி, ஐந்து நோய் அடும் - சப்த ரச ஸ்பரிச ரூப கந்தளாகிய இந்திரியங்களின் விஷயங்களால் பீடிக்கும், செக்கிலிட்டு - எள்ளாட்டும் செக்கிலிட்டு, திரிக்கும் - பிழியும், ஐவரை- பஞ்சேந்திரியங்களைச் சத்துருப்படைகளாக உருவகப்படுத்திப்பேசுகிறபடி,நேர் -நேராகவும், மருங்கு -சுற்றுப்பக்கங்களிலும், உடைத்தாய் - சூழ்ந்திருக்கும்படி இடங்கொடுத்ததென்று தாத்பரியம். அடைத்து - விலகாதபடி பிடித்துக்கொள்ளும்படி காவலிட்டு, நெகிழ்ப்பான் - பீடிக்கின்றவன், ஒக்கின்றாய்போலத் தென்படுகிறாய், இனிமருந்தாவார் யார் - இனி இவ்வியாதிகளைத் தீர்க்க யாரிருக்கிறார்கள், ஒருவருமில்லையென்று, விண்ணுளார் பெருமானே—வைகுண்டவாசியாகிற பக்தர்கள்சூழ் பகவானிடத்தில் தன்குறைகளைச் சொல்கிறபடி.

6-ம் பாசுரம்

விண்ணுளார் பெருமாற் கடிமைசெய்
வாரையுஞ் செறுமைம் புலனிவை
மண்ணுள் என்னைப் பெற்றா
லென்செய்யா மற்றுநீயும் விட்டால்
பண்ணுளாய் கவிதன்னுளாய் பத்தியி
னுள்ளாய் பரமீசனே வந்தென்
கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளா
யொன்று சொல்லாயே.

அவதாரிகை:—இவ்வாழ்வார் பகவானிடத்திலேயே உண்ணுஞ்சோறும் தின்னும்வெற்றிலையு மென்றெல்லாம் இருக்க ஐம்புலன்கள் தம்மைச் செறும் என்று பயப்படுவானேனென, வைகுண்டவாசியான கருடபகவானையே, இவ்வுலகில் சிறிதுகாலம் உருவமெடுத்து நடையாடும்போது, சிறுமைப்படுத்திய ஐம்புலன்கள் தன்னையும் அதுபோல் ஹிம்ஸிக்கக்கூடும் என்ற பயத்தினால் தமக்கும் தீங்கு ஸம்பவிக்கலாம் என்று முகாந்திரம் காட்டுகிறபடி.

உரை—விண்ணுளார் பெருமாற்கு- ஸாக்ஷாத் பகவானுக்கு, அடிமை செய்வாரையும் - நித்திய ஸூரிகளாகி வைகுண்டத்திலிருந்து தங்கள் இஷ்ட பூர்த்திக்காகத் தொண்டு செய்யும் நித்திய கைங்கரியபரர்களையும், செறும் - மரியாதை மீறி நடக்கும்படிசெய்யும், ஐம்புலனிவை - இவ்வைந்து புலன்கள் நுகரும் விஷயங்கள், மண்ணுள் - இப்பூமியிலே ஸம்ஸரிக்கின்ற, என்னைப் பெற்றால் - என்னைத் தாக்கினால், என் செய்யா—என்ன கேடுகளை விளைக்காமல் விடும். மற்று - இதுவும் தவிர, நீயும் விட்டால்-இவைகளைத் தடுத்துக் காப்பாற்றவேண்டிய நீயுமே கைவிட்டால், என் செய்யா - என்ன தீங்குகளை இயற்றாமல் விடும். பண்ணுளாய் - இவ்வண்ணம் துர்ப்பலனாகிய நான் கதறிக் கூப்பிட்டால் என் பாசுரங்களால் என் மனோபாவத்தை நன்றாயறிந்த நீ, கவிதன்னுள்ளாய் - என் கவிகளைக் கேட்கிற நீ, பத்தியினுள்ளாய் - யானுன்னிடத்தில் வைத்திருக்கும் பிரியத்திற்கு விஷயமான நீ, என் கண்ணுள்ளாய் - எனது மனக்கண்ணுக்கு எப்போதும் தோன்ற அமைந்திருப்பவனே,நெஞ்சுளாய் - மனஸுக்குள்ளே யிருப்பவனே, சொல்லுளாய் - என் சொற்களுக்கு விஷயமானவனே, அதாவது என் ஸ்நேகத்திலும், உன்னை விட்டுப் பிரிந்து தரிக்கமாட்டாத என் மனம், கண்கள், நெஞ்சு முதலான உறுப்புக்களிலும் இருந்து ஸர்வமறிந்தவனாயும், ஸர்வேசுவரனாயுமிருக்கும் நீ, வந்து - நாலடி நடந்து வந்து, ஒன்று சொல்லாய் - ஒன்று சொல்ல வேணும், உன் திருவடிகளிலே சேர்க்கையாதல் அல்லது சேர்ப்பிக்க வமையாதென்றாத லிவற்றிலேதேனுமொன்று சொல்லவேண்டும்.

விசேஷக் குறிப்பு:—ஸ்ரீ கிருஷ்ண பகவானும்அர்ச்சுனனும் கூடியிருக்கும்போது அக்நிபகவான் தனக்கு வெகு யாக யஞ்ஞங்களில் ஆஜ்ஜிய (நெய்) ஆகுதிகளைப்புசித்தமையால்அக்நிமாந்தியம்(பசியின்மை) ஏற்பட்டுவிட்டதாகவும் அதற்கு ஔஷதாதிகளை மருந்தாகப் புசிக்கவேண்டுமென்றும் ஸ்ரீகிருஷ்ணபகவான் உதவிபுரிந்தால் காண்டவ வனமென்ற பெரியகாட்டை ஸகல சராசரங்களுடனும் புசித்தால் நலமென்றும் இதனை இடையூறுகளில்லாமல் ஸகல ஔஷதாதிகள் மிருகங்கள் பறவைகள் சர்ப்பங்கள் எல்லாவற்றையும் புசிக்க அவைகள் தப்பிப் போகாமல் மடக்கித்தனக்கிரையாகும்படி தரவேண்டுமென்றும் யாசித்தான். ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ச்சுனனைக் கொண்டு அக்நி எரியுமிடத்தில் மழைமாரி பெய்து தடைப்படாமலிருக்கும்படி ஆகாயத்தில் சரங்களினால் பந்தரை நிர்மாணம் செய்து அக்நிபகவானுக்கு, யாசித்தபடியே வரனளித்தார். இதே சமயம் கெருட பகவானும் இப்பூமியில் சாப நிமித்தம் சிலகாலம் அவதரித்து வாழவேண்டியதாயிற்று. காண்டவவன தஹனத்தில் நெருப்பைப் பரவவிடாமல் இந்திரன் மழை பெய்தாலும் அக்நி பகவான் தனக்கு வேண்டிய ஔஷதாதிகளையும் இதரபிராணிகளையும் புசித்தான். இங்ஙனம் தஹனம் நடந்துகொண்டிருக்கையில் ஸுமுகன்என்ற ஓர்சர்ப்பம் அக்நியால்பீடிக்கப்படுவதற்குப் பயந்து ஆகாய மார்கத்தில் கிளம்பி ஓடிற்று. இப்படி ஓடுகையில் "கிருஷ்ணா, காப்பாற்று" என்று அபயம் கேட்டுக்கொண்டது. கிருஷ்ணபகவான், கட்டளையைச் சிரமேல்கொண்டு அர்ச்சுனனும் 'அபயம்" என வாக்களித்தான். இவ்வண்ணம் வாக்களித்திருந்தும், ஆகாயத்திலிருந்து நடந்த விந்தையைக் கண்ணுற்ற கருடபகவான் தனக்குப் பிரியமான ஆஹாரமாகிய சுமுகன் ஆகாயமார்க்கமாகத் தப்பியோடிப்போகுங்கால் துரத்திப் பிடிக்க எத்தனித்தான். இந்தஸுமுகனுக்கு ஒருவாறு பகவானின் காப்பு அமைந்திருப்பதைக் கருடன் அறிந்திருந்தும் நாக்கு உருசியின் சபலத்தால் மிதமிஞ்சி மரியாதை கடந்தான். இதை எடுத்துக் கூறியதின் நிமித்தம், ஐம்புலன்கள் பெரியாரையும் விஷயங்களில் ஆழ்வித்து அவரது பெருமையைக் குலைக்குமென்று காட்டுதல் பற்றியாம்.

இ ர த் ந ா வ ளி

[714-ம் பக்கத் தொடர்ச்சி]

களம் 5.

இடம்:—வாழைச்சோலை.

வத்ஸராஜனும் வஸந்தகனும் வருகின்றனர்.

வஸந்தகன்:—இதுதான் அச்சோலை. உட்செல்வோம்: நாகணவாய்ப் புள் யாதாயிற்று? போகட்டும்; கதலியின் இலைகளூடு தண்ணென்று மெல்லத் தென்ற லூடாடும் இவ்விடத்தில் இந்த ஆதனத்தில் அமர்வோம்.

வத்ஸ:—அப்படியே (உட்காருகின்றனர்)

வஸந்:—என்னவது அங்கே. ஒருகால் குரங்கு உடைத்தெறிந்த அப்பறவையின் கூண்டோ?

வத்ஸ:—அது யாதெனச் சென்று பார்.

வஸந்:—பார்க்கின்றேன் (போய்ப் பார்க்கின்றான்) என்னவிது! ஓர் சித்திரப்படம்! (கையில் எடுத்துக் கொள்கின்றான்) ஹ, ஹ! அரசே, நல்ல அதிர்ஷ்டசாலி நீ.

வத்ஸ:—என்ன அது?

வஸந்:-எல்லாம் நான் சொன்ன அப்படியேதான்: இதோ உன் உருவம். பூங்கழை மதனனை உன்னையன்றி வேறு யாரையே வரைந்திருத்தல் கூடும்?

வத்ஸ:—என் கையில் கொடு.

வஸந்:—இரு இரு, சற்றேயிரு. என்ன! இங்கு வரைந்திருக்கின்ற மாதரசியை, விலையின்றிச் சும்மா காட்டிவிடுவேனா நான்?

வத்ஸ:—இதனை யெடுத்துக்கொள் (தன் வாகுவலயத்தைக் கழற்றித் தருகின்றான். அதனைப் பெற்றுக் கொண்டுவஸந்தகன் அப்படத்தைஅரசனது கையில் கொடுக்கின்றான்) ஹா!நண்பா, பாரிதனை, மானதவாவிக்கவாவிச்செல்லும்இந்தத் தூவியன்னம்யாவதோ! இதன் விளையாட்டிடையே கஞ்சங்கள் கலங்குகின்றன. பாக்கியம் நமக்குப் பெரிதுளதெனப் பகர்கின்றதேஇம்முகம். தன்செந்தாமரைச் சிறையினின்றும் நான்முகன் முதல்முதல் வெளிப்பட்ட அந்நாள் இம்முகத்தினை முழுமதியென மயங்கினனென்னற்கையமில்லை. (படத்தை உற்று நோக்குகின்றான்.)

[ஸுஸங்கதையும் ஸாகரிகையும் வருகின்றனர்.]

ஸுஸங்:–அப்பறவையைத் தொடர்வதில் இனிப் பயனில்லை. ஆதலின், இந்தப் படத்தினை யெடுத்துக் கொண்டு நாம் உட்செல்வோம்.

ஸாகரி:—அப்படியே செய்வோம்.

வஸந்:-(அரசனை நோக்கி) தன் தலையை இத்துணை குனிந்து தரையை நோக்குகின்ற அவ்வனிதைதான், அரசே, யாரென்று நினைக்கின்றாய், நீ?

ஸுஸங்:—கேள் கேள்! அது வஸந்தகன் குரல். அரசனுடன் பேசுகின்றான் என எண்ணுகின்றேன். இம்மரங்களின் மறைவில் ஒளிந்து அவர் தம்முள் பேசிக்கொள்வதைக் கேட்போம்.

(ஒளிந்துகொள்கின்றனர்)

வத்ஸ:—பதும ஆதனத்தினின்று முதலில் வெளிப்பட்டபோது பிரமன் இம்முகத்தினை, நிகரிலா அத்திங்களேயென மதித்தான்.

ஸுஸங்:—பெண்ணே, நீ பாக்கியம் செய்தாய்; உன்காதலன் நின்புகழினை இனிது பாராட்டிக்கொண்டிருக்கின்றான்.

ஸாகரி:—உன் களிப்புடைப் பரிகசத்திற்குஎன்னை இப்படி இலக்காக்கலாமா?

வஸந்:—இப்படி அவள் தன் சிரத்தினை எற்றுக்குத் தாழ்த்தி யிருக்கின்றாள்?

வத்ஸ:—அப்பறவைதான் அனைத்தையும் நமக்குப் பகர்ந்துவிட்டதே.

ஸுஸங்:—கேள்கேள்! நான்சொன்னபடியே அப்பறவை நாம் முன் பேசிக்கொண்டதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஸாகரி:—(தனக்குள்) என்ன மறுமொழி தருவனோ இவன்? என் இன்னுயிர் இருப்பதற்கும் போவதற்கு மிடையே ஊசலாடுகின்றது.

வஸந்:—நன்று, உன் கண்களைக் கவர்கின்றாளோ அவள்?

வத்ஸ:—கண்களைக் கவர்வதா? அவள் வனப்புடை மேனியையும் மெல்லிய இடையையும் பருகிப் பருகிப் பசியாறுமல் அவ்விடத்தே சுழல்கின்றனவே என் நயனங்கள்: இடையினின்று எழுகின்ற என் நோக்கம், அரும்பு மவள் கொங்கைகளில் தங்கிப்பின் மேற்சென்று, முத்தெனத் திரண்டவோர் கண்ணீர் தங்கிய அவளது அழகிய கண்களில் உறைந்துவிடுகின்றது.

ஸுஸங்:—கேட்டனையா?

ஸாகரி:—நீதான் கேள். இச்சித்திரத்தைத் தீட்டியவர்தம் திறமையை வியக்கின்றான் அவன்.

வஸங்:—நல்லது, ஐயனே, அம் மங்கையின் காதலுக்கு இலக்காகி இதனில் உன் உருவம் வரைந்து காட்டப்பெற்றிருக்கின்றதென்பதை உணர்ந்துகொள்ளாத உன் மடமையை என்னவென்பேன்.

வத்ஸ: — என் உருவத்தைச் சால அழகுபடுத்தி வரைந்திருக்கின்றாள் என்பதை நான் மறுக்கவில்லை. அவள் என்பால் வைத்த அன்புந் தென்படுகின்றது. ஏனெனில், இப்பொழுது என் மெய்யின் மயிர்க் கால்தோறும் சுரக்கின்ற வியர்வைபோல் அவள் கண்களினின்று அப்பொழுது பெருகிய நீர் இச்சித்திரத்தில் ஆங்காங்குப் படிந்திருப்பதைப் பார்.

ஸாகரி:—(தனக்குள்) இதயமே, பாக்கியஞ் செய்தனை. உன்னுடைய காதல் கொள்ளுமிடங் கண்டே சென்றுளது.

ஸுஸங்:—தோழி, உனக்கு நல்லகாலம்எய்துகின்றது. எங்கள் தலைவனது காதல் நாடியுள்ள ஒருத்திக்கு உரிய பெருமையுடன் இனி நாங்கள் உன்னைப் பாராட்டவேண்டும்.

வஸங்:—(சுற்றிப்பார்த்து) அவளது ஆசையின் அடையாளங்கள் இதோ இருக்கின்றன. தன் தோழிக்கு அவள் தனதுகாதலைத் தெரிவித்தபோது தன் மார்போடு ஒத்திக்கொண்ட தாமரையிலைகள் இவை.

வத்ஸ:—நன்கு மதித்தனை. வெய்ய அவள் மேனியுடன் சேர்ந்த விடத்தில் இவ்விலை வாடியும், படாத இடத்திற் பசுமைமாறுமலும் இருக்கின்றது, காண். அவள் முலைகளின்மீது அப்பிய இந்த இலையின் நடுவிடம் வாடாதிருக்க, இருபுறத்திலும் பொசுங்கிய வட்டங்கள் அவளது ஆர்வத்தின் வேகத்தைக் காட்டித் தருகின்றன.

வஸங்:—(நாளத்தை எடுத்துப் பார்த்து) இன்னுமொரு அடையாளம். தாமரையிலையினை யவள் தனங்களிற் கட்டின இவை.

வத்ஸ:—(அதனைத் தன் மார்பிலணைத்து) இன்னும் இதன் தண்மை மாறவில்லை. நூலின் இழையொன்று நுழையமாட்டாமல் குவிந்துள்ள அம்மலைகளுக்கு இடையே, தண்டாமரைத்தண்டே, நீ யெங்ஙனம் செல்வாய்; விம்மும் அம் முலைகளிற் றோய்தல் இல்லையால் வாடுகின்றனையோ, சொல்.

ஸுஸங்:—(ஒரு புறமாய்) இப்படி வாய்தந்தன பேசுமிவ் வரசர்பெருமான் சாலக் கலங்கியிருத்தல் வேண்டும். அவனைத் தெளிவிக்காமல் விட்டகல்தல் அழகன்று. (ஸாகரிகையை நோக்கி) இனியென், தோழி, நீ நாடிவந்தது நின்னெதிர் நிற்கின்றது.

ஸாகரி:—எதனை நாடிவந்தேன் நான் என்று எண்ணுகின்றாய் நீ?

ஸுஸங்:—அப்படத்தைத்தான், வேறு எதனை? அதோ இருக்கின்றது—எடுத்துக்கொள்.

ஸாகரி:— (கோபமுடன்) நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையாகையால் விலகுகின்றேன்.

ஸுஸங்:—என்னவிது, சற்றேனும் பொறுமையில்லையா! அப்படத்தினை அரசன் கைகளிலிருந்து நாம் வாங்கிக்கொள்ள முயலவேண்டு மல்லவா?

ஸாகரி:—ஆம்.

[வஸந்தகன் தன்னைப் பார்க்கும்படி ஸுஸங்கதை முன்வருகிறாள்]

வஸந்தகன்:—அரசே, அப்படத்தினை இவ்வாழை இலைகளுக்குள் ஒளித்துவிடு. அரசியின் மாதர்களில் ஒருத்தி இங்கு வருகின்றாள். (வத்ஸராஜன் படத்தினைத் தன் உத்தரீயத்தில் மறைக்கின்றான்.)

ஸுஸங்:—(முன் வந்து) அரசே, நின் பெருமை பெருகுக!

வத்ஸ:—ஸுஸங்கதா வா. நானிங்கிருப்பதைஎவ்வாறு அறிந்தனை?

ஸுஸங்:—நான் அறிந்துகொண்டது இது ஒன்று மாத்திரமே யன்று. அப்படத்தின் இரகசியமுந் தெரியும்: பின்னும் சில செய்திகளும் எனக்குத்தெரியும். இப்பொழுதே சென்று நான் அவைகளை அரசிக்கு உரைப்பேன்.

வஸந்த:—(வத்ஸராஜனுக்குத் தனியாக) காரியம் கெட்டது. வாய்பெருத்த வம்பள் இவள். இலஞ்சம் ஏதேனுங்கொடுத்து இவள்நாக்கினைக் கட்டிவைத்தல் நலம்.

வத்ஸ:—ஸுஸங்கதா, இரு. இந்தக் கடகத்தை ஏற்றுக்கொள். இது வெறும் விளையாட்டுவிடயம், அரசியினிடம் சொல்வதற் குரியதன்று.

ஸுஸங்:—வள்ளலே, என்னைப்பற்றி அஞ்சவேண்டா. இவ்வணிகலன்களை நீயே வைத்துக்கொள். நானும் சிறிது விளையாடினேன். எனதருமைத் தோழி ஸாகரிகை, அவளது உருவத்தை நான் வரைந்தேன் என்று என்மீது சாலச் சினங்கொண்டுளள். நீ என் பொருட்டு அவள்பால் பரிந்துபேசி அச்சினத்தை ஆற்றும்படி வேண்டுகின்றேன்.

வத்ஸ:—(ஆர்வமுடன்) எங்குளள் அவள்? அவள்பால் என்னை யழைத்துச்செல்.

வஸங்:—அப்படத்தினை என்கையில்கொடுத்துவிடு. நான்காத்திருக்கின்றேன். மீண்டும் அது நமக்குவேண்டியிருக்கும்.

ஸுஸங்:—இவ்வழி, இவ்வழி....

(முன்செல்கின்றனர்)

ஸாகரி:—இவ்வழி வருகின்றான் - அவனைக்காணவே என் உடலம் பூரிக்கின்றது. நிற்கவும் ஆற்றேன், நடக்கவும் ஆற்றேன்—என் செய்வேன் ஏழையேன்.

வஸங்:—(அவளைக் கண்ணுற்று) வனிதையர் விந்தையே இவள். இன்னுமொரு நல்லாள் இவள்போல் இவ்வுலகிலில்லை. இவளைப்படைத்தபோது பிரம்மன் தன் கைத்தொழில் கண்டு தானே ஆச்சரியம் பெரிது அடைந்திருப்பான்.

வத்ஸ:—என் கருத்தும் அன்னதே. பிரம்மனது நான்கு வாய்களும் ஒரேகுரலில், "ஆச்சரியம், ஆச்சரியம்"! எனக்கூறியிருக்கும். தான் வீற்றிருக்கும் தாமரையினும் அழகிய இக்கண்களைக்கண்டவளவில் அக்கடவுளின் சிரங்கள், உலகிற்கோர் அணியாய இவள் வனப்பினை வியந்து அசைந்திருக்கும்.

ஸாகரி:—(ஸுஸங்கதையை நோக்கி) இந்தப் படத்தைத்தானே கொணர வந்தனை?

வத்ஸ:—அழகுமிகு அணங்கே, நினது தோழியை வெகுண்டுநோக்க முயல்கின்றாயாயினும், மென்மையே இயற்கையாய அக்கண்கள் வன்மைபூண இயலாமற்றயங்குகின்றன. இம்முகம் திரும்பிப்பார். என்னை விட்டகலாதே. நின்னைப்பிரிந்தக்கால் பெரிது வருந்துவேன் யான்.

ஸுஸங்:—ஐயனே, அதிகமுங் கோபங்கொண்டுளள் இவள். அவள் கரங்களைப்பற்றி நீ இதனைத் தணிக்கவேண்டும்.

வத்ஸ:—நன்று சொல்லினை (அவள் கரங்களைப் பற்றி அருகழைத்துக்கொள்கிறான்.)

வஸங்:—அரசே, உன்பாக்கியத்தைப்பாராட்டுகின்றேன். இன்னதோர் அதிர்ஷ்டம் வேறு யாருக்கு வாய்த்தது?

வத்ஸ:—நன்று சொல்லினை; திருமகளே இவள். பாரிசாதத்தருவின் புதியதோர் தளிரே இவள் கரம்! இல்லையேல், இவ் வமிர்தத் துளிகள் சுரந்து திரள்வதெங்ஙனம்?

ஸுஸங்:—எனது அருமைத் தோழி, எம்பெருமான் கரங்கொடுத்து ஏற்கவும் நீ இணங்காமல் நெடிருத்தல் நேராமோ!

ஸாகரி:—(சினந்து) சும்மாவிருக்க மாட்டாயோ நீ, ஸுஸங்கதா!

வத்ஸ:—உன் தோழியை இத்துணை வெகுளல் அழகன்று.

வஸங்:—பாவாய், பசித்திருக்கும் ஒரு பார்ப்பான் போல் நீ இப்படிப் படபடத்துச்சிடுசிடுத்துப் பேசுவதேன்?

ஸுஸங்:—ஆயின் நான் அகன்றுசெல்கின்றேன்.

வத்ஸ:—ஆருயிர்த் தோழியர்பால், இத்துணைச் சீற்றங் கொள்ளல், நல்லாய் நினக்குச் சீரிதாமோ?

வஸங்:—ஹோ ஹோ! இதோ எம்பெருமாட்டியொரு வாஸவதத்தையே வந்து நிற்கின்றாள்.

(வத்ஸராஜன் ஸாகரிகையின் கரங்களை விட்டுவிடுகின்றான்)

ஸாகரி:—(ஸுஸங்கதையை நோக்கி) என்ன செய்வேன் நான்!

ஸுஸங்:—இத் தமாலத்தருக்களின் இடையே புகுந்து நாம் அகன்றுவிடலாம்.

(விரைந்து நீங்குகின்றனர்.)

வத்ஸ:—வஸந்தகா, அரசியெங்கே (சுற்றிப் பார்த்து) வாஸவதத்தை எங்கே?

வஸங்:—நானறியேன். இன்னொரு வாஸவதத்தை இங்கு வந்திருக்கின்றாள் என்றுதானே கூறினேன். கோபத்தால் இவளும் அவளேபோல்கின்றாள் என்பது பொருள்.

வத்ஸ:—சீ, போ! என் நல்வினையும் அவள் நல்லன்பும் தொகுத்தெனக்குச் சூட்டிய இரத்தின மணிமாலையை நீ இன்னணம் வலிதிற் புகுந்து அறுத்துவிட்டாய்.

(சிறிது அகன்று நிற்கின்றனர்)

[அரசி வாஸவதத்தையும் அவள் பணிப்பெண் காஞ்சனமாலையும் வருகின்றனர்.]

வாஸவ:—பெண்ணே, என் தலைவர் அன்புடன் வளர்க்கும் அம் மல்லிகைச்செடி இன்னும் எத்தூரமுளது?

காஞ்ச:—இவ் வாழைச்சோலையைக் கடந்தவுடன் அவ்விடம் சேர்வோம். நம் மரசர்பெருமான் அங்கு இருக்கின்றார். அவ்விடம் செல்லலாம்.

வாஸவ:—(அரசனை அணுகி) தலைவ, நின் பெருமை சிறப்பதாகுக.

வத்ஸ:—(வஸந்தகனை நோக்கி). அப்படத்தினை ஒளித்துக்கொள்—விரைவாக. (வஸந்தகன் அதனை வாங்கிப் பின்புறமாக மறைத்துக்கொள்கின்றான்).

வாஸவ:—என் தலைவ, நின் மல்லிகைச்செடி யது அரும்பு விட்டதோ?

வத்ஸ:—நின் பொருட்டுக் காத்திருந்தேன். இன்னும் நா னதனைக் காணவில்லை. நாமிருவரும் சென்று பார்ப்போம்.

வாஸவ:—வேண்டா, நின் முகத்தின் மலர்ச்சியால் அதுவும் மலர்ந்துவிட்டதென்று தெரிந்துகொள்கின்றேன். இது போதும்; அங்குப் போய்ப் பார்ப்பானேன்?

வஸங்:—ஆயின், எங்கள் மந்திரம் பலித்ததென்று எம்பெருமாட்டி ஒப்புக்கொள்கின்றாள். ஆஹா! ஹா! (கைகளை ஆட்டிக் குதிக்கின்றான். படம் நழுவி விழுகின்றது. அரசன் அதனைக் கோபமுடன் வஸந்தகனுக்குக் காட்டுகின்றான்)

வஸங்:—(வத்ஸராஜனுக்கு ஒருபுறமாய்) கலங்காதே. நானுன்னைக் காக்கின்றேன்.

காஞ்ச:—(படத்தை யெடுத்து அரசிக்குக் காட்டி) தேவி, இது யாரது உரவம், பார்?

வாஸவ:—(உற்றுப் பார்த்து ஒருபுறமாய்) இது என் தலைவர்! ஸாகரிகை அல்லளோ இவள்! (அரசனை நோக்கி) மன்னவா என்ன விது?

வத்ஸ:—(வஸந்தகனை நோக்கி) யாதுசொல்வேன் நான்?

வஸங்:—(அரசனை நோக்கி) அஞ்சாதே, நான் பார்த்துக்கொள்கின்றேன். (வாஸவதத்தையை நோக்கி) அரசனது உருவத்தைத் தீட்ட முடியாதென்று கூறினேன். அதன்மேல் எம்பெருமான் தனது திறமையிற் சிறிது காட்டினார்.

வத்ஸ:—ஆம் அப்படித்தான், அப்படித்தான்.

வாஸவ:—நின்னருகு நிற்கின்ற இப்பெண்! இதுவும் வஸந்தகனது திறமையின் ஒரு சிறு பாகமோ!

வத்ஸ:—என்னவோ சங்கை கொள்கின்றாய் நீ? மனோபாவத்தினின்று கற்பனைசெய்ததோர் சித்திரம் இது. இவ்வுருவத்திற்குடையாளை இதன்முன் கண்டதில்லை.

வஸங்: — என் பூணூல்மீது ஆணை. இப்படத்தைக் காண்பதன்முன், இவ்வுருவத்திற்குடையவளை நானேனும் நம்மரசர்பெருமானேனும் கண்டதேயில்லை. ஸத்தியம்.

காஞ்சன:—ஏதோ சொல்லிக் கழிக்கப்பார்க்கின்றான். ஆயினும் சினங்கொண்டு பயனில்லை.

வாஸவ:—காஞ்சனமாலை, அதன் பொருள் உனக்கு விளங்கவில்லை. வஸந்தகனை நானேயன்றோ அறிவேன். (அரசனை நோக்கி) தலைவா, நான் செல்கின்றேன். இப்படத்தைப் பார்த்ததுமுதல் என் தலை வலிக்கின்றது. உன்விளையாட்டை நீ இடையூறின்றி நடத்திக்கொள்.

வத்ஸ:—ஆருயிர்த் தலைவி, நினக்கு யான் உரைக்கத் தருவது யாதெனத் தெரியவில்லை. நீ வெகுண்

டில்லையாயின், என்னைப் பொறுத்தருள வேண்டுவது மிகை. குற்ற மொன்றும் நான் செய்திலேனுதலின், மீண்டும் புரியேன் என நான் வாக்களிக்கப் புகுவது பொருந்தாது.

வாஸவ:—அரசே, நிச்சயம் என் தலை வலிக்கின்றது; அது பற்றியே அகல்கின்றேன், வேறொன்றுமில்லை.

(காஞ்சனமாலையுடன் போகின்றாள்.)

வஸந்:—அரசே இம்முறை அரிதின் தப்பினாய். வேனில்காலத்துக் கூடிய முகிலென்ன அவள் சினம் சிதைந்தகன்றது.

வத்ஸ:—முழு மூடன் நீ, சீ போ! களிப்பதற்கு இதுவன்று காலம். மறைப்பதற்கு வீணே முயன்றாளாயினும் அரசியின் கோபம் பெருகியதைக் காணவில்லையா நீ. சினமொன்று அவள் முகத்தில் கறுத்துப் படர்ந்தது. தலைகுனிந் தவள் நின்றபோது எள்ளிய நகையொன்று அவள் இதழ்களில் தவழ்ந்தது. சீற்றமுடைய சொற்களொன்றும் அவள் பேசவில்லை, உண்மையே; கண்களும் கோபத்தால் கனன்றதில்லை, உண்மையே;—ஆயினும், திரளும் துளியொன்றை அவள் தன் கண்களினுள் மிகவருந்தி அடக்கிக்கொண்டனள். என்னை வெறுத்து விட்டிலளேனும், அவளது அபிநய மொவ்வொன்றிலும் வெகுளியை வெளிக் காட்டாமல் அடக்குகின்ற முயற்சி அரிதிற்புலப்பட்டது. நாம் இப்பொழுதே சென்று அவள் சினத்தினைத் திருத்தித் தணிக்கவேண்டும்.

(போகின்றனர்)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

சூளாமணி

[717-வது பக்கத் தொடர்ச்சி]

இரதநூபுரச் சருக்கம்

39. அச்சிறுமியின் கண்களில் புதியதோர் அழகும் ஒளியும் தோன்றுகின்றன. அவை அசையுந்தோறும் வாள்கொண்டு வீசுவது போலப் பிறழ்கின்றன. வாள்வீச்சும் நீளப்பாய்ந்தோற்போலத் திடுக்கிடுகின்றனர் காண்கின்றவர். இளமை இவ்வாறு பழுக்கின்றது. கூடாதமுடிகள் இப்பொழுதுகூடித் தரைவரையும் நீண்டு தொங்குகின்றன. அக் கூந்தற்கு அகிற்புகையூட்டுகின்றனர் அவ்வழகு கண்ட தோழியர். அவள் வாயும் செக்கச்சிவந்து பவழம்போல விளங்குகிறது. பற்கள் விழுந்து முளைத்து நிறைகின்றன. புதிதாகவும் கடைவாயில் தோன்றுகின்றன. அவள் நகைமுகம் கொண்டு புன்முறுவல் பூக்குந்தோறும் இதழின் செம்மைக்கருகே வெண்மையொளி வீசுகின்றன அப்பற்கள். அப்புன்முறுவல் அன்பெனும் நல்லொளியைப் பரப்புகின்றது. காதலையும் ஊட்டப் போவனவாதலின் அச்சமும் அங்கே திகழ்கின்றது. நாமநல்லொளிவேல் நம்பியின் தங்கைக்கு நாமநல்லொளி முள்ளெயிறுள்ளமை பொருத்தமன்றோ? தந்தையே குழவியாகிப் பிறக்கின்றமையைக் குறிக்க அங்கும் இங்கும் ஒரே சொற்றொடரைப் பயன்படுத்துகின்றார் நம் தோலாமொழித்தேவர். அப்பற்கள் முல்லை யரும்புபோல ஒளிர்கின்றன. எந்த முல்லை யரும்பு? அவளுக்குள்ளே யிருந்தே உடலழிந்த மன்மதன் வளர்ந்தெழுகின்றான். அவனோடு அவனுடைய படைகளும் வளர்கின்றன. அவனுடைய அம்புகளில் ஒன்றாகிய முல்லைப் பூவும் அரும்பு விடுகின்றது. அம் முல்லைப் பூவரும்பே இப்பற்கள். அத்தகைய விளக்கங்கொண்டு பொலிகின்றன இவை. கண்டால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் இவ்வாறு முளைவிடுகின்றது. இப்பாட்டிலும் கண்ணியக்கம் கொண்டும் கூந்தலின் நீளம் கொண்டும் பல் முளைதல் கொண்டும் அச்சிறுமியின் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டித் தக்க அடைகள் கொண்டு புனைந்துரைத்தல் காண்க.

40. "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல, 'நெஞ்சத்து நல்லம்யாம்' என்னும் நடுவுநிலைமையால் கல்வியழகேயழகு. அவ்வழகு பெண்களுக்கும் வேண்டும் என்பதுபற்றியேயன்றோ "மஞ்சள் அழகையும்" உடன் கூறினார், என்பர் வேதநாயகம்பிள்ளையவர்கள். பெண்களை அறிவிலிகளாக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர் தோலாமொழித்தேவர். கல்வியழகு நிரம்புவதனை அழகிலேபாடுகின்றார். அழகிய கூந்தல்; இயத்கையழகொடு செயற்கை ஒப்பனைகளால் என்றும் அணியோடு திகழும் கூந்தல். இத்தகையகூந்தலுக்கு மணிமுடி சூடவேண்டாவா? கல்விமுடி சூட்டுகின்றார். கல்வியறிவுநூலிலேயே ஏட்டிலேயே நின்றுவிடின் பயனுண்டோ? "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக." நம் மனதிலே ஊன்றி நின்று நம் எண்ணத்தையும் பேச்சையும் செயலையும் திருத்துவதே கல்வி. ஆகவே கல்வியனைத்தும் வெறும் பகட்டாயல்லாமல் அவ்வகையில் உள்ளத்தே நிலைநின்று ஒளிர விரும்பினான் தந்தையான ஜ்வலநஜடி. அரைகுறை கல்வியோ அவன் வேண்டுவது? நிறைந்த கல்வி; மஞ்சுதோயப்பெற்றுக் குளிர்ந்த இன்ப அன்பு நாடாக விளங்கும் அம்மலைநாட்டில் கல்வியிற்சிறந்த விஞ்சையராம் ஆடவரும், இவள் கல்விநிறைவைக் கண்டு அஞ்சிநிற்கத் தக்க அத்தகையமாட்சிமையைத் தன்மகள் அடைய வேண்டுகின்றான் அவ்வரசன்.

> எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணியார் ஆகப் பெறின்.

என்றபடி இவன் எண்ணம் ஈடேறுகின்றது. பலதிறக் கல்விகளும் தொழுத்தையராக நின்று பணிவிடை செய்து வருகின்றன. கல்வியைப் பூவெனக் கூறும் உயர்ந்த கருத்தை அந்நாளிலேயே வெளியிடுகின்றார் தேவர். குறையாது கல்விகள் பூங்கொத்தாய்மலர்ந்து மணந்து ஒளிர்கின்றன. அப்பூங்கொத்தைச்சூடுகின்றார் அஞ்சிலோதிக்குநம் புலவர்பெருமானும் தோலாமொழித் தேவர். இவ்வழகுக் கடவுளை இப்பூக்கொண்டுதானே வழிபடவேண்டும்.

41. நல்லார் ஒருவர்உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை. இந்த நல்ல நங்கை பிறந்ததால் அந்நாடும் சீர்பெற வேண்டாவா? அத்தகைய குறிகளும் அருட்கொடி படர்ந்த நாட்டிற் காணக் கிடக்கின்றன. அரசனும் நல்லவன்; அவன் மகளும் தொழப்பாடு நவின்ற அருட்கொடி. இவ்விடமகன்ற உலகம் அனைத்தும் இது கண்டு அன்பு கொண்டொளிரும் வேலானுடைய கடவுட்பேற்றை வியந்து அக் கடவுட்பேறு பயன்படுமாறு அவனேவற் பணியே இறைப்பணி எனக்கொண்டு மிகவிரும்பித் தன்னலமற்றுப் பிறர்க்கெனவாழும் சீர் அடிமைத்தொழிலில் தங்கித் திருத்தொண்டு புரிந்து வருகின்றனர். இவர்கள் அடிமைகள் அல்லர். திருத்தொண்டர்கள் ஆவர். வெங்கண் யானையை அடக்கியாளும் வெற்றியொளி கொண்டு உலகை விளங்கச்செய்யும் வேந்தர்களும் இவனுடைய இந்நிலைமையைக்கண்டு வணங்காமல் நீண்ட முடியும் வணங்கத் தொண்டர்படையில் தலையணியில் நிற்கின்றனர். இவ்வளவும் நிகழ்ந்தது அம்மை பிறந்த பின்னேதான். இவ்வாறு அருள் வெள்ளம் முனைப்புச் சாய எங்கும் புரண்டோடுகின்றது.

தனிப் பாடல்கள்

ஆறு முகமுடையாய் ஆறிரண்டு தோளுடையாய்
ஏறு மயிலுடையாய் எம்முடையாய்—கூறுசெயும்
வேலுடையாய் பொல்லா வினையுடைய வெம்திக்குங்
காலுடையாய் நீயே கதி. 1.

தீயாருக் கஞ்சியுனைச் சேர்ந்தழுத தேவர்களைத்
தாயாகிக் காத்த தனிமுருகா—நோயால்
வருந்து மெமக்குன் மலரடியே நல்ல
மருந்து மணிமந் திரம். 2.

வற்றாத் திருவருளின் வாரியே வண்டமிழைக்
கற்றார்க் களிக்குமருட் கற்பகமே—பற்றுதார்
செல்வமே ஞானத் திகழொளியே தீயவினை
அல்லல்நோய் தீர்த்தாண் டருள். 3.

ஆயிழையாள் மைந்தா வரன்மகனே வெம்பிறவி
போயிழையா தாளுமருட் புண்ணியனே-நோயினையா
துண்ணும் மருந்து முதவும் மருத்துவனும்
கண்ணும் மணியும்நீ கா. 4.

முற்பிறப்பிற் செய்தவினை மூண்டவோ வேல்முருகா
இப்பிறப்பிற் செய்தனவந் தெய்தியவோ-எப்பிறப்பில்
செய்தனவந் தாலுந் திருநோக்கால் மாற்றிமகிழ்
வெய்தவரு ளீவா யினி. 5.

அறிந்து மறிந்து மடியேம்செய் தீமை
அறிந்தநீ யன்றியறி வாரார்—அறிந்துமனம் [துன்
என்செய்தோ மென்றென் றிரங்கியினிச் செய்யா
பொன்செய்தாள் தந்தாள் புகல். 6.

அவ்வினைகட் கிவ்வினைக ளாமென் றழுங்கியிருந்
துய்வினைகள் நாடா ருலகத்தார்—உய்வினைகள்
நாடிநா டோறுமுனை நன்றாகக் கும்பிட்டால்
ஓடிவினை போமே யொழிந்து. 7.

கூரார் தனிவேற் குமராவுன் சேவடிக்கே
ஆராத பேரன் படைந்துவிட்டால்—சேரும்
இருண்மலமென் செய்யு மிருவினையென் செய்யும்
வருபிணியென் செய்யுமோ மற்று. 8.

அங்கிருக்க வென்று லயன்விடான் அங்குதப்பி
இங்கிருக்க வென்றால் எமன்விடான்—எங்குப்போய்
ஆறுவேன் ஆறுதலை ஐயா வருள்புரிவாய்
ஏறுமா றின்னற் கரை. 9.

வன்னமயில் வீரனே வள்ளிமண வாளனே
அன்னைதெய்வ யானைக் கரையனே—மன்னும்
வடிவேலா வம்மை மகிழ்பாலா ஞான
வடிவாதா நோய்தீர்த் தருள். 10.

ஆறுமோ வாறு வருந்துயர மாறிமனம்
தேறுமோ நல்லைத் திருமுருகா—ஏறுமயில்
வாகனனே பொல்லாங்கு மாற வழங்குவையோ
கோகனகத் தாளறியேன் கூறு. 11.

செய் தீவினைப்பயனாற் சேருங் கொடுஞ்சுரத்தால்
ஐயா வுலக மலமருமே—வெய்யசுரம்
மாறும் படியுமிந்த மன்னுயிர்க ளின்படைந்து
தேறும் படியுமருள் செய். 12.

கலா நிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன

உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை	ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட்	,,	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது		10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடுபல்பொடி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
காஸ்ட்ராலகல்
ஜ்வரேக
[பண்டங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

கதையல்ல உண்மை :— செர்வியா தேசத்தில் மேரி யென்ற மாது சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் விதவையாய்விட்டாள். பீட்டர் என்ற பிள்ளை மட்டும் இருந்தான். அவள் தனது கணவன் நடத்திய சாராயக்கடையை நடத்தி வந்தாள். மூன்று ஆண்டுகள் கழித்து மேரிக்கு (கூடா ஒழுக்கத்தால்) ஒரு பெண் பிறந்தது.

பீட்டர் பெரியவன் ஆனபொழுது தன் தாயின் கூடா ஒழுக்கத்தை அறிந்து பத்துவயதிலேயே ஹங்கேரிநாட்டுக்குப் போய் வேலைசெய்து காளடைவில் ஒரு தொழிற்சாலை முதலாளியானான்.

பீட்டர் தனது தாய்க்கும் தங்கைக்கும் ஒழுங்காகப் பணம் அனுப்பிவந்தான். கடைசியாக அவர்களைப் பார்த்துவருவதென்று புறப்பட்டான். வந்து, பீட்டர் தனது மனைவியுடனும் மகளுடனும் அவர்களை ஒரு விடுதியில் விட்டு இரகசியமாக இரவில் தனது தாயார் நடத்திய விடுதிக்குச் சென்றான். அப்பொழுது 'கிறிஸ்மஸ்' திருவிழா. கிறிஸ்மஸ் விருந்துச் சாப்பாடு நடக்கும்பொழுது தன்னை இன்னாரென்று தாயாருக்கு அறிவிக்க வேண்டுமென்று பீட்டர் கருதியிருந்தான். தாயாருக்கும் தங்கைக்கும் கிறிஸ்மஸ் பரிசுகள் அளிக்குமாறு ஏராளமான பணமும் கொண்டுவந்திருந்தான்.

பீட்டர் தனது அறையில் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தபொழுது தாயார் (மேரி) அங்குச் சென்றாள். பணத்தைக் கண்டவுடன் அவளுக்கு ஆசை உண்டாய்விட்டது. இரவில் தூங்கும்பொழுது மேரி தனது மகளையும் துணையாகச் சேர்த்துக்கொண்டு சமயல்வேலைக்கு உபயோகிக்கும் கத்திகளால் விருந்தாளியாக நடித்து வந்த [தனது மகன்] பீட்டரைக் குத்திக்கொன்று அறையில் புதைத்துவிட்டாள்.

* * *

கடிதம்:—பின்னர் இக்கொலை பாதகியான மேரி விருந்தாடியிருந்த இடத்தில் ஒரு கடிதத்தைக் கண்டாள். 'எனது அருமைத் தாயார் மேரிக்கு, அவளை என்றும் மறவாத மகன் பீட்டரிடமிருந்து' என்று எழுதிய அக்கடிதத்தில் பீட்டர் தனது தாயாருக்குக் கொடுக்கக் கருதியிருந்த பணமும் இருந்தது! பண ஆசையால் தான் கொலைசெய்த மனிதன் தனது குமாரனே யென்பதையும் அவன் தன்மீது கொண்டிருந்த அன்பையும் கண்ட மேரி உடனே தூக்குப் போட்டுக்கொண்டாள்!

மறுநாள் கிறிஸ்மஸ் திருநாள். பீட்டரின் சிற்றப்பன் வந்து, நேற்றிரவு வந்த வெளிநாட்டு யாத்திரை வாசி யெங்கே யென்று மகளைக் கேட்டார். யாத்திரை வாசி ஒருவரும் வரவில்லை யென்று மகள் சொன்னாள். சிற்றப்பன் அவ்விடம் யாத்திரை வாசியாக வந்தவன் அவள் அண்ணன் என்று கூறித் தாயாரை விசாரிக்கும்படி சொன்னார். திகிலடைந்த அந்தப் பெண் தாயார் இருந்த அறைக்கு ஓடிச் சென்றாள். அங்கே தாயார் பிணமாய்க் கிடந்தாள். மகள் சிற்றப்பனிடம் திரும்பி வரவில்லை. அவள் ஒரு கிணற்றில் விழுந்து விட்டாள்!

—"லோகோபகாரி"

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஆம் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! **"காம சாஸ்திரம்"** இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the [illegible] Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)